வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 06 | 30.11.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 334 | பக்கங்கள் : 16

## அவசர காலச் சட்டம் அமுலில்!

கொழும்பு, நவ. 30

நாட்டில் தற்போது நிலவும் அசாதரண நிலைமை காரணமாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவசர காலச் சட்டத்தை பிறப்பித்துள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும், பொது வாழ்க்கையை நிலைநிறுத்த அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்கும் அவசரகாலச் சட்டம் பிறப் பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சனத் நந்தித குமநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின்படி, நேற்று முன் தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.(அ)

# சீரற்ற வானிலை காரணமாக யாழில் 10 ஆயிரத்து 5 குடும்பங்கள் பாதிப்பு!

### இடம்பெயர்ந்த மக்கள் இடைத்தங்கல் முகாம்களில்



யாழ்ப்பாணம், நவ.3.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக 10,005 குடும்பங்களைச் சேர்ந்த 31,871 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவப் பிரிவு நேற்றிரவு தெரிவித்துள்ளது.

நேற்று இரவு எட்டு மணி வரையிலான நிலவரப்படி அனர்த்த முகாமைத்துவப் பிரிவு இதனை அறிக்கையிட்டுள்ளது.

24 தற்காலிக தங்குமிடங்களில் 561 குடும்பங்களைச் சேர்ந்த 1,956 பேர் யாழ்ப்பாண மாவட்டத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகவலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர்

15

## இலங்கையின் நிவாரண முயற்சிக்கு அமெரிக்கா 2 மில்லியன் டொலர்கள்!

கொழும்பு, நவ. 30

இலங்கையின் அவசர நிவாரண முயற்சிகளுக்கு ஆதரவாக அமெரிக்கா 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிவாரணமாக அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள மக்கள் பலத்த மழை மற்றும் வெள்ளம் காரணமாக கடினமான நாட்களை எதிர்கொள்வதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கவலை வெளியிட்டுள்ளார்.

மேலும் இந்த நெருக்கடியின் போது அமெரிக்கா இலங்கையுடன் ஒற்றுமையாக நிற்கிறது

15

## சீனாவும் உதவ தயார்!

கொழும்பு, நவ. 30

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதற்காக சீனா தாயாராகவுள்ளதாக சீனக் குடியரசு தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் சீனக் குடியரசு தனது உண்மையான அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் சீனா தனது ஒற்றுமையையும் ஆதரவையும் வழங்கும் என சீனக் குடியரசு தெரிவித்துள்ளது. (அ)

## அச்சமடைய தேவையில்லை!

யாழ்ப்பாணம், நவ. 30

டிட்வா புயலின் உள்வளையத்தின் பின் பகுதி கடலினுள் சென்று கொண்டிருக்கின்றது. அதனால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னாரில் காற்று சற்று வேகமாக வீசுகின்றது. சற்று கனமழையும் கிடைத்து வருகின்றது என யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-.

இது புயலின் ஆற்றல் மிக்க உள்வளையம் கடலுக்கு செல்வதன் விளைவே இந்த வேகமான காற்று வீசுகை மற்றும் சற்று கனமழை

02

## இயற்கை இடரினால் 159 பேர் உயிரிழப்பு!

### 203 பேரைக் காணவில்லை

### 8 இலட்சம் மக்கள் பாதிப்பு



கொழும்பு, நவ. 30

நாட்டில் வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களால் கடந்த 16 ஆம்திகதி முதல் நேற்று இரவு 8 மணி வரை மொத்தம் 159 பேர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் 203 பேர் காணாமல் போயுள்ளதாக

15

## பாரிய வெள்ள அனர்த்தத்தில் சிக்கித் தவிக்கும் கிளிநொச்சி!

கிளிநொச்சி, நவ. 30

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் தத்தளிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் பல வீதிகளின் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஊடாக வட்டக்கச்சி செல்லும் கண்டி வீதி இரணமடு குளத்தின் மேல் அதிக நீர் வெளியேற்றப்படுவதன் காரணமாக போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

02

## வடக்கின் வெள்ள நிலைமையை ஆளுநர் நேரில் பார்வையிட்டார்!



யாழ்ப்பாணம், நவ. 30

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பேரிடர் நிலைமைகளை நேரில் பார்வையிடுவதற்காக, வடக்கு மாகாண

15

## தொலைத்தொடர்பு துண்டிப்பு

கொழும்பு, நவ. 30

நாட்டின் பல பகுதிகளில் தொலைத் தொடர்பு மற்றும் இணைய சேவைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

கடுகன்னாவ மற்றும் வத்தளை உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் பைபர் கேபிள்கள் சேதமடைந்தன் காரணமாக இணைய சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன என டிஜிற்றல் அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சு வெளியிட்ட தகவலின்படி,

பரவலான வெள்ளம் மற்றும் தொடர்ச்சியான மின் தடைகள் பல மாவட்டங்களில் தொலைத் தொடர்பு சேவைகளை மேலும் பாதித்துள்ளன.

15

## முல்லைத்தீவு வெள்ளத்தில்!

முல்லைத்தீவு, நவ. 30

கிளிநொச்சியிலிருந்து புதுக்குடியிருப்பு வரை பஸ் சேவை நடைபெறுகின்றது. அதிலும் ஏ- 35 நெடுஞ்சாலையில் மாணிக்கப்பிள்ளையார் கோவிலடி, மூங்கிலாறு, கைவேலி மஞ்சள் பாலம் பகுதிகள் வீதியை மூடி வெள்ளம் பாய்வதால் பஸ்கள் போன்ற வாகனங்கள் மட்டும் பயணிக்கின்றன என தெரிவிக்கப்பட்டது.

பொறுப்பு வாய்ந்த அரச நிர்வாக கட்டமைப்போ, படைத்தரப்போ மக்களை மீட்கும் பணியில் ஈடுபடவில்லை.

இருட்டுமடு, குரவில் உட்பட்ட பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

15

## மன்னாரில் 40 பேர் அந்தரிப்பு!

மன்னார், நவ. 30

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் அறிவுறுத்தல்களை மீறி சிது விநாயகபுரத்தில் தங்கி இருக்க 40 பேர் வீடுகளின் கூரைகளுக்கு மேல் தங்கி உள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இருவர் காணாமற்போயுள்ளதாக அறியக் கிடைக்கும் நிலையில் மீட்பு பணிக்காக சென்ற உலங்கு வானூர்தி அதிக புகைமூட்டம் காரணமாக இடங்களை அடையாளப்படுத்த முடியாத நிலையில் வவுனியாவுக்கு திரும்பிச் சென்றுள்ளது.

கடற்படை மீட்பு பணிக்காக சென்ற நிலையில் நீரின் வேகம் காரணமாக குறித்த பகுதிக்கு

15

## வெள்ளத்தில் மூழ்கிய மன்னார் - யாழ். வீதி!

மன்னார், நவ. 30

மன்னார் - யாழ்ப்பாணம் வரை செல்லும் வீதி முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பயணங்களை தவிர்க்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மல்வத்து ஓயாவின் ஆற்று வெள்ளம்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார்- யாழ்ப்பாணம் ஏ- 32 வீதி முற்றாக வெள்ளத்தில் மூழ்கியது!

## மன்னார் அனர்த்த முகாமைத்துவ பிரிவு

மன்னார், நவ. 30

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மல்வத்து ஓயாவின் ஆற்று வெள்ளம் மன்னார் மாவட்டத்தின் அநேக இடங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே. திலீபன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மன்னார் தொடக்கம் யாழ்ப்பாணம் வரை செல்லும் ஏ - 32 வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

குறித்த வீதியூடாக வாகனங்களில் பயணம் செய்வதை முற்றாக தவிர்க்குமாறு பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, பாதுகாப்பை கருத்தில்கொண்டு தேவையற்ற பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)



# இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் மேலும் உயர்வு

## கிளிநொச்சி மக்களுக்கு எச்சரிக்கை

கிளிநொச்சி, நவ. 30

பலத்த மழை காரணமாக, கிளிநொச்சி - இரணைமடு குளத்தின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால், குளத்தின் 14 வான்கதவுகள் திறக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவு மக்கள், குறிப்பாக ஐயன் கோவிலடி, முரசுமோட்டை, கண்டாவளை, உரியன், பனங்கண்டி தடுவன்கொட்டி மற்றும் கனகராயன் குளம் அருகே உள்ள மக்கள், நிலைமையை கவனத்தில் கொண்டு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# நிவாரண பொருட்களுடன் இந்திய விமானம் வந்தது



கொழும்பு, நவ. 30

இந்தியா - இலங்கை உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், இந்திய அரசாங்கமும் மக்களும் வழங்கிய நன்கொடைகளுடன் கூடிய விமானம் நேற்று அதிகாலை இலங்கையை வந்தடைந்துள்ளது.

இந்த நன்கொடையில் 80 தொன் எடையுள்ள சுகாதாரப் பொருட் தொகுதிகள் அடங்குகின்றன.

இதனை இலங்கை விமானப் படை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுள்ளது.

இதேவேளை இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள டித்வா புயலில் தமது அன்புக்குரிய உறவுகளை இழந்த இலங்கை மக்களுக்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தமது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளதாவது,

இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் மஹா சாகர் தொலைநோக்கு ஆகியவற்றின் வழிகாட்டலுடன், உதவிகள் தேவைப்படும் எந்நேரத்திலும் இந்தியா இலங்கையுடன் தொடர்ந்து துணை நிற்கும் என மோடி குறிப்பிட்டுள்ளார். (எ)

## டித்வா புயல் எச்சரிக்கை: 54 விமானங்கள் இரத்து

சென்னை, நவ. 30

தமிழகத்தின் தென் மாவட்டங்கள் மற்றும் மத்திய மாவட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் எனக்கூறப்படும் 'டித்வா' புயல் காரணமாக கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் சென்னை விமான நிலையத்தில் இருந்து தூத்துக்குடி,

மதுரை, திருச்சி ஆகிய நகரங்களுக்கு இயக்கப்படும் 16 விமானங்கள் இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புயல் மழை எச்சரிக்கை காரணமாக சென்னை, தூத்துக்குடி, மதுரை, திருச்சி, புதுச்சேரி ஆகிய நகரங்களில் நேற்று மொத்தம் 54 விமானங்கள் சேவை இரத்து என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானங்கள் இரத்து எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என தெரிகிறது.

சென்னை, மதுரை, திருச்சி, தூத்துக்குடி உள்ளிட்ட இடங்களில் இருந்து இயக்கப்படும் ஏ.டி.ஆர். எனப்படும் சிறிய ரக விமானங்கள் அனைத்தும் நேற்று காலையில் இருந்து இரவு வரையில் இயக்கங்களை நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மழையுடனான வானிலை இன்று முதல் குறையகூடும்

கொழும்பு, நவ. 30

டித்வா புயலானது நேற்று முன்தினம் இரவு 11. 30 மணியளவில் திருகோணமலையிலிருந்து 70 கிலோ மீற்றர் வடமேற்கே மையம் கொண்டிருந்ததாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது வடக்கு நோக்கிச் சாய்ந்த வடமேற்குத் திசையில் நகர்ந்து, இன்று 30ஆம் திகதியளவில் இந்தியாவின் தமிழ்நாடு கடற்கரையை அண்மிக்கும் என எதிர்பார்க்கப்படு கிறது.

இந்த நிலையில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை இன்று முதல் குறைவடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடமேல் மாகாணங்களில் தொடர்ச்சியான மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டின் பல பகுதிகளில் மணிக்கு 60 - 70 கிலோ மீற்றர் வேகம் வரை பலத்த காற்று வீசுவதுடன் இடைக்கிடையே மணிக்கு 80 - 90 கிலோ மீற்றர் வேகம் வரை காற்று அதிகரித்து வீசும் என கூறப்படுகின்றது.

பலத்த மழை மற்றும் பலத்த காற்று காரணமாக ஏற்படும் ஆபத்துக்களைக் குறைப்பதற்கான தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர். (எ)

## பாரிய...

அதேபோன்று ஏ-35 பரந்தன் முல்லை தீவுக்கான பிரதான வீதி கண்டவளை பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் உள்ள பாலத்தில் வெள்ளநீர் வீதியின் குறுக்கே ஓடுவதன் காரணமாக முல்லைத்தீவு கிளிநொச்சிக்கான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை இராணுவத்தினர் மற்றும் கடல் படையினர் கண்டாவளை பிரதேச செயலர் இணைந்து பெரியகுளம் அப்பகுதியில் இருந்து பாது காப்பான இடங்களுக்கு படகுகள் மூலம் அவர்களை ஏற்றி அனுப்பிவைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது நேரடியாக வெள்ள பாதிப்புகளை 2500 இற்கும் மேற்பட்டவர்கள் எதிர்நோக்கியுள்ளனர் அத்துடன் பெருமளவானோர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் அத்துடன் இவர்களுக்கான சமைத்த உணவை வழங்கும் நடவடிக்கைகள் பிரதேச செயலங்கள் இராணுவத்தினர் முன்னெடுத்து வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டது. (அ)

## அச்சமடைய...

காணப்படுகிறது.

அச்சப்பட எதுவமில்லை. ஆனால் ஏற்கனவே மண் நெகிழ்வான நிலையில் இருப்பதனால் மரங்கள் பாறி விழக்கூடும். மின் கோபுரங்கள் சரிந்து மின் வடங்கள் அறுந்து விழக்கூடும். ஆகவே இவை தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும்.

இன்று(நேற்று) இரவுடன் இந்த வானிலை நிலைமை யும் சீரடைந்து விடும்-என்றார். (அ)

# சீரற்ற காலநிலை யாழில் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக மருதங்கேணியில் ஒருவர் உயிரிழந்தார்.

அந்தோணி பெர்னாண்டோ என்ற 66 வயது முதியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு வெளியிட்ட அறிக்கையில் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,

நெடுந்தீவு மற்றும் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த இருவர் அனர்த்தத்தில் காயமடைந்தனர். (எ-03)

### மழையுடனான சீரற்ற காலநிலையால்

# பருத்தித்துறையில் மட்டும் 1014 பேர் பாதிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணத்தில் சீரற்ற கால நிலையால் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் மட் டும் 311 குடும்பங்களைச் சேர்ந்த 1014 பேர் பாதிக்கப்பட்டுள்ள னர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத் துவ பிரிவின் பிரதிப் பணிப் பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் 1297 குடும்பங்களைச் சேர்ந்த 4140 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 311 குடும் பங்களைச் சேர்ந்த 1014 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 240 குடும்பங்களைச் சேர்ந்த 795 பேரும், சங்கானை பிரதேச செயலக பிரிவில் 224 குடும்பங் களைச் சேர்ந்த 725 பேரும், நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவில் 139 குடும் பங்களைச் சேர்ந்த 403 பேரும் வேலணை பிரதேச செயலக பிரிவில் 64 குடும்பங்களைச் சேர்ந்த 229 பேரும் பாதிக்கப் பட்டனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 194 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் 63 குடும்பங் களைச் சேர்ந்த 176 பேரும், மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் 46 குடும்பங் களைச் சேர்ந்த 151 பேரும், காரைநகர் பிரதேச செயலக பிரிவில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 138 பேரும், உடுவில் பிரதேச செய லக பிரிவில் 31 குடும்பங்களைச் சேர்ந்த 109 பேரும் யாழ்ப்பா ணம் பிரதேச செயலக பிரிவில் 32 குடும்பங் களைச் சேர்ந்த 106 பேரும் பாதிக்கப்பட்டனர்.

கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 31 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேரும், நல்லூர் பிரதேச செயலக பிரிவில் 14 குடும் பங்களைச் சேர்ந்த 39 பேரும், ஊர்காவற்துறை பிர தேச செய லக பிரிவில் 3 குடும் பங்களைச் சேர்ந்த 7 பேரும், கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவரும் பாதிக்கப் பட்டனர்.

மேலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 85 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்ததுடன் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு வீடு முழுமையாக சேதமடைந்தது.

ஐந்து தற்காலிக தங்குமிடங்களில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 106 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த நிவாரண பணிகளில் 22, 440 இராணுவப் படையினர்

## வடக்கில் 3,000 இராணுவத்தினர் மீட்பு பணியில்

### இராணுவ தளபதி தெரிவிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனர்த்த நிவாரண சேவைகளை வழங்குவதற்கு 22,440 இராணுவப் படையினர் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ தெரிவித்துள்ளார்.

கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, அம்பாந்தோட்டை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் சுமார் 12, 800 இராணுவத்தினர் அனர்த்த நிவாரண சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலநறுவை, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சுமார் 3,580 இராணுவத்தினர் அனர்த்த நிவாரண சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் சுமார் 2,960 இராணுவத்தினர் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வவுனியா, முல்லைத்தீவு, அநுராதபுரம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் சுமார் 3,100



இராணுவத்தினர் அனர்த்த நிவாரண சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணிகளுக்கு படகுகளும் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார். (எ)

# களனி கங்கையின் நீர்மட்டம் சடுதியாக உயரும் அபாயம்

கொழும்பு, நவ. 30

களனி கங்கையின் நீர்மட்டம் சடுதியாக உயரும் அபாயம் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

களனி கங்கைக்கு அருகில் உள்ள கொலன்னாவை, கொழும்பு, அவிசாவளை, ஹோமாகம மற்றும் கடுவலை ஆகிய பகுதிகளில் வெள்ள அபாயம் தீவிரமடையக்கூடும் எனவும் நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதேவேளை, மகாவலி கங்கை, அட்டுளு கங்கை, மகா ஓயா, மாணிக்க கங்கை மற்றும் தெதுரு ஓயா ஆகியவற்றின் நீர்மட்டங்களும் அதிகரித்துள்ளதாகவும் குறித்த ஆறுகளின் தாழ் நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறும் நீர்ப்பாசனத் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. (எ)

மகா ஓயாவின் நீர்மட்டம் அதிகரிப்பு

# வரலாறு காணாத அளவுக்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட கூடும்

கொழும்பு, நவ. 30

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக மகா ஓயாவை அண்டிய பிரதேசங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் மகா ஓயாவை அண்டிய பிரதேசங்களுக்கு வரலாறு காணாத அளவுக்கு பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்படக் கூடும் என நீர்ப்பாசன திணைக்களம் எச்சரித்துள்ளது.

எனவே, மகா ஓயாவை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுமாறு நீர்ப்பாசன திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. (எ)

# கொழும்பில் மட்டும் இதுவரை 1,696 குடும்பங்கள் பாதிப்பு!

கொழும்பு, நவ. 30

அதிதீவிர வானிலையால் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 1,696 குடும்பங்களை சேர்ந்த 7,592 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் நலன் கருதி 20 தற்காலிக தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுவரை, 289 பேர் தற்காலிக தங்குமிடங்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# இலங்கைக்கு வந்த இந்திய மீட்புக்குழு

கொழும்பு, நவ. 30

இந்திய மீட்புப் பணிக் குழுவினர் நேற்று அதிகாலை இலங்கைக்கு வந்துள்ளனர்.

இந்திய விமானம் மூலம் இந்தக் குழுவினர் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

இதில் நான்கு பெண்களும் 76 ஆண்களும் அடங்குகின்றனர்.

மேலும், நான்கு மோப்ப நாய்களும் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நாட்டில் நிலவும் மோசமான வானிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களை விரைவில் மீட்கும் நோக்குடன் இந்தக் குழுவினர் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இவர்கள் அனர்த்த நிவாரண உபகரணங்களையும் கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது. (எ)

# கண்டியில் பாரிய மண்சரிவு

கண்டி, நவ. 30

கண்டி மாவட்டத்தின் அங்கும்புர கல்கொட்டுவ பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட பாரிய மண்சரிவு காரணமாக அந்தப் பகுதியில் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக மண்சரிவு ஏற்பட்டதாகவும் மண்சரிவு ஏற்பட்ட இடத்தில் வீடுகள் மற்றும் சொத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஆரம்ப கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதிப்பு ஏற்பட்ட பகுதியைச் சேர்ந்த சில குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மண்சரிவு ஏற்பட்ட பகுதி அதிக அபாய நிலை பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளதால், மீட்புப்படையினர் மற்றும் பொலிஸார் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

மேலும், பாதிக்கப்பட்ட பகுதிக்கு பொதுமக்கள் செல்ல வேண்டாம் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நிலவும் மோசமான வானிலை காரணமாக மலைப் பகுதிகள் முழுவதும் மண்சரிவு அபாயம் அதிகரித்துள்ளதால், மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (எ)

# 91 பிரதேச செயலர் பிரிவுகளுக்கு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 30

நாடு முழுவதும் தற்போது நீடித்து வரும் கடும் மழை மற்றும் மோசமான வானிலை காரணமாக 11 மாவட்டங்களில் உள்ள 91 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மிக உயர்ந்த மட்டமான 3ஆம் கட்ட வெளியேறும் அறிவிப்பான சிவப்பு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட மண்சரிவு முன் எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்யும் கன மழை காரணமாக பல பகுதிகளில் நிலச்சரிவு, பாறை சரிவு மற்றும் நிலத்தடி இடிவுகள் ஏற்படும் ஆபத்து மிக அதிகரித்துள்ளதால், மக்கள் அவசியமெனில் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# அத்தனகலு ஓயா நீர்மட்டம் தொடர்ச்சியாக அதிகரிப்பு:

## வெள்ள அபாய எச்சரிக்கை

கம்பஹா, நவ. 30

கம்பஹா மாவட்டத்தினுள்ள அத்தனகலு ஓயாவின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கம்பஹா - துனமலைப் பகுதியின் மேல் பகுதிகளில் நேற்று முன்தினம் 300 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை பெய்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்கள பணிப்பாளர் எல். ஏ. சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

துனமலை நீர் அளவீட்டு நிலையம் தற்போது அதன் அதிகபட்ச அளவை எட்டியுள்ளதுடன், அந்த நிலையமும் நீரில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக, கம்பஹா மாவட்டம் மற்றும் கம்பஹா நகரத்தின் தாழ்வான பகுதிகள், வத்தளை மற்றும் ஜா-எல போன்ற பகுதிகள் தொடர்ந்தும் நீரில் மூழ்கும் அபாயம் காணப்படுகிறது.

இதேநேரம், மஹா ஓயாவுக்கு அதிக வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, கிரிஉல்ல மற்றும் படல்கம அளவீட்டு நிலையங்கள் மிக அதிக நீர்மட்டத்தை எட்டியுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திவுலபிட்டிய, அலவ்வ, கட்டான, மீரிகம, தங்கொட்டுவ, பன்னல, நாரம்மல, நீர்கொழும்பு மற்றும் வென்னப்புவ ஆகிய பகுதிகளில் தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது பல ஆறுகளில் பாரிய வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# மக்களை மீட்கும் பணிகளுக்கு தடங்கல்

கொழும்பு, நவ. 30

நாட்டில் நிலவும் அதிதீவிர வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணிகளுக்கு தடங்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான போக்குவரத்து மற்றும் தொடர்பு சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்த தடங்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்கவோ பாதிக்கப்பட்டவர்களை மீட்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த பகுதியில் உள்ள மக்கள் கூறினர். (எ)

டித்வா புயல்: சீரற்ற கால நிலையால்

# திருகோணமலையில் மட்டும் 10, 214 குடும்பங்கள் பாதிப்பு!

திருகோணமலை, நவ. 30

சீரற்ற கால நிலை மற்றும் டித்வா புயல் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 10, 214 குடும்பங்களைச் சேர்ந்த 31, 634 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலக பிரிவை உள்ளடக்கிய 182 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலிருந்து நேற்றுக் காலை 08.00 மணி வரையான தகவலின் அடிப்படையில் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 294 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட 9, 602 குடும்பங்களைச் சேர்ந்த 29, 809 பேர் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.14 தற்காலிக முகாம்களில் 612 குடும்பங்களை சேர்ந்த 1825 பேர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவில் 360 குடும்பங்களைச் சேர்ந்த 1056 பேரும், தம்பலகாமத்தில் 369 குடும்பங்களைச் சேர்ந்த 1149 பேரும், மொறவெவவில் 105 குடும்பங்களைச் சேர்ந்த 321 பேரும், சேருவிலவில் 173 குடும்பங்களைச் சேர்ந்த 582 பேரும், வெருகலில் 398 குடும்பங்களைச் சேர்ந்த 1272 பேரும், மூதூரில் 4024 குடும்பங்களைச் சேர்ந்த 11, 754 பேரும், கிண்ணியாவில் 2375 குடும்பங்களைச் சேர்ந்த 7763 பேரும், கோமரங்கடவலவில் 41 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேரும், பதவிசிறிபுரவில் 371 குடும்பங்களைச் சேர்ந்த 1187 பேரும், குச்சவெளியில் 1795 குடும்பங்களைச் சேர்ந்த 5720 பேரும், கந்தளாயில் 203 குடும்பங்களைச் சேர்ந்த 710 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர நிலை சட்டத்தை உடன் அறிவிக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் மனோ கணேசன் வலியுறுத்தல்

கொழும்பு, நவ. 30

இனியும் தாமதிக்காமல் அவசர நிலை சட்டத்தை உடன் அறிவிக்க வேண்டும் என்றும் அரசு அதிகாரிகளிடையே குறிப்பிடத்தக்க தயக்கமும் பயமும் உள்ளது. இந்த நெருக்கடியான சூழலில் பொதுமக்களுக்கு பணி செய்ய வேண்டுமெனில் அந்த தயக்கத்தை உடைக்க வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,முப்படை தலைமையகத்தில் அரசாங்கம், எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தை நடத்தியது.

எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் ஒருமனதாக ஜனாதிபதியிடம்அவசர நிலையை அறிவிக்க வேண்டுமென வலியுறுத்தினோம்.

எங்கள் நோக்கம் தெளிவாக உள்ளது. மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், நிவாரணம் வழங்க வேண்டிய அதிகாரம் கொண்டவர்கள். ஆனால், சட்டத்தை மீறி, நாம் சிக்கலில் விழுந்து விடுவோமா என இன்று தயங்கி நிற்கிறார்கள்.

தரை மட்டத்தில் மக்களுக்கான நிவாரணம் வழங்கும் அந்தஸ்த்தில், முடிவெடுத்து செயல்பட வேண்டிய முன்னணி நிர்வாகிகளான அவர்களுக்கு, அவசர கால அதிகாரங்களை வழங்குங்கள்.

ஆகவே, அவசர நிலை சட்டத்தை ஜனாதிபதி பிரகடனம் செய்ய வேண்டும் என தெரிவித்தார். (எ)

# இரத்த தானம் வழங்குமாறு வேண்டுகோள்

கொழும்பு, நவ. 30

அனர்த்த நிலை காரணமாக இரத்த வங்கி ஊடாக மேற்கொள்ளப்படும் இரத்த விநியோகம் ஸ்தம்பித்துள்ளது. எனவே, இரத்த தானம் வழங்க முன்வருமாறு தேசிய இரத்த மாற்று சேவை நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறிப்பாக நாரஹேன்பிட்டி தேசிய இரத்த மத்தியஸ்தானத்துக்கும்,

இரத்த வங்கிகளுக்கும் இரத்த தானம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, நாரஹேன்பிட்டி தேசிய இரத்த மத்தியஸ்தானத்தில் காலை 08.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை இரத்த தானம் வழங்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கொழும்பு துறைமுக செயல்பாடு தற்காலிகமாக இடைநிறுத்தம்

கொழும்பு, நவ. 30

தீவிரமான வானிலை காரணமாக கொழும்பு துறைமுகத்தின் அனைத்து செயல்பாடுகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை துறைமுக அதிகார சபை அறிவித்துள்ளது.

தற்போது நாட்டின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக பலத்த மழையும், அதனுடன் கூடிய பலத்த காற்றும் பதிவாகி வருகின்றன.

இந்த நிலைமை துறைமுகப் பகுதிகளில் பாதுகாப்பு ஆபத்துகளை உருவாக்கியுள்ளதால், எந்தவித அனர்த்தமும் ஏற்படாத வகையில் செயல்பாடுகளை நிறுத்தும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பயனாக, கொழும்பு துறைமுகத்தில் உள்ள அனைத்து முனையங்களின் செயல்பாடுகள், சரக்கு ஏற்ற இறக்க பணிகள், கப்பல் நகர்த்தல் மற்றும் தொடர்புடைய சேவைகள் முழுமையாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வானிலை நிலைமை சீராகும் தருணத்தில் செயல்பாடுகள் வழமைக்கு கொண்டுவரப்படும் என துறைமுக அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (எ)

### களனி ஆற்றை அண்டிய

# தாழ்நிலப் பகுதி மக்களுக்கு இடம்பெயர்வு அறிவுறுத்தல்

கொழும்பு, நவ. 30

களனி ஆற்றின் நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்புள்ளது என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் காரணமாக, களனி மற்றும் அதனை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு அபாயம் அதிகரித்து வருவதால் உடனடி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

களனி பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள மேவெல்ல, பெத்தியாகொட, சிங்கார முல்ல, பேலியாகொட, வெலேகொட, ஹுணுப்பிட்டி வடக்கு மற்றும் தெற்கு உள்ளிட்ட கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பான இடங்களுக்கு உடனடியாக இடம் பெயருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் இருந்து இடம்பெயரும் மக்களுக்கு தங்குமிட வசதிகள், பாதுகாப்பு முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்பு முகாம்களில் குடிநீர், உணவு, மருத்துவ உதவி மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கமும், மீட்புப் பணிப்பிரிவுகளும் மக்களுக்கு தொடர்ந்து வழிகாட்டுதல்கள் வழங்கி வருவதால், அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (எ)

# கொத்மலையில் பாரிய மண்சரிவு: மக்களை காப்பாற்ற கோரிக்கை

நுவரெலியா, நவ. 30

நுவரெலியா, கொத்மலை பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த மண்சரிவு நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் ஏற்பட்டுள்ளது.

நுவரெலியா - பூண்டு லோயா வீதிகளுக்கு இடையே யான கிராமத்தின் மத்திய பகு தியே இவ்வாறு மண்சரிவில் சிக்கியுள்ளதாகத் தெரிய வந் துள்ளது.

இந்த மண்சரிவு காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்கள் அங்கேயே இருப்பதாகவும், அவற்றை அகற்றவோ அல்லது காயமடைந்தவர்களை மருத்துவமனையில் அனுமதிக்கவோ முடியாமல் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்துக்குள் ளாகியுள்ளதாகவும் தெரியவருகிறது.

அந்தப் பகுதிக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ள நிலையில் தொலைபேசி இணைப்புகளும் செயலிழந்துள்ளன.

சுமார் 50 பேருக்கும் அதிகமானவர்கள் இந்த மண்சரிவால் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் சிக்கியுள்ள மக்களை மீட்கத் துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட மக்களின் உறவினர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்த இடத்தைச் சென்றடைவது முற்றிலும் தடைப்பட்டுள்ளதாகவும், இதுவரை எந்தவொரு அனர்த்த நிவாரணக் குழுவும் குறித்த இடத்தை அடையவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகத்திடம் வினவியபோது, மண்சரிவுகள் குறித்த தகவல்கள் பதிவாகியிருந்தாலும், அது குறித்த சரியான தகவல்களை இதுவரை வெளியிட முடியவில்லை என்று தெரிவித்தனர்.

தகவல் தொடர்பு தடைகள் காரணமாக இந்தத் தகவலை பெறுவது கடினமாக இருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.(எ)

# கொலையில் முடிந்த குடும்ப தகராறு மனைவி உயிரிழப்பு கணவன் கைது!

காலி, நவ. 30

காலி - பத்தேகம - இதுலஹிட்டிய பகுதியில் கணவனால் தாக்கப்பட்டு மனைவி கொலை செய்யப்பட்டுள்ளதாக பத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக இந்தத் தாக் குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

தாக்குதலில் காயமடைந்த மனைவி பத்தேகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பத்தேகம - இதுலஹிட்டிய பகுதியைச் சேர்ந்த 33 வயது பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.சம்பவத்துடன் தொடர்பு டைய சந்தேக நபரான கணவன் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் செயலிழப்பு

கொழும்பு, நவ. 30

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் பல நீர் மூலங்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் நீரில் மூழ்கியுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப் புச் சபை தெரிவித்துள்ளது.

குறிப்பாக கண்டி மாவட்டத் தில் உள்ள நிலையங்கள் முற்றி லும் செயலிழந்தன.

கேகாலை, மாவனெல்ல, வட மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் சில பகுதிகளிலும் நீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது மேல் மாகாணத் தின் களனி ஆற்றின் நீர்மட்டம் 7 அடி ஆக அதிகரித்ததால், அம்பத்தலே சுத்திகரிப்பு நிலை யம் சவாலை சந்தித்துள்ளது. இதனால், கொழும்புக்கான நீர் விநியோகம் பாதிக்கப்படலாம் என்று தேசிய நீர் வழங்கல் மற் றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் சந்தன பண்டார தெரி வித்தார். (எ)

# சிறைச்சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு தடை

## அதிகாரிகளுக்கு விசேட அறிவித்தல்

கொழும்பு, நவ. 30

நாட்டில் நிலவும் அனர்த்த நிலைமை காரணமாகத் தமது சேவை நிலையங்களுக்கு வர முடியாத சிறைச்சாலை அதிகாரிகள் உடனடியாகத் தமக்கு அருகிலுள்ள சிறைச்சாலைகளில் சேவைக்குச் சமுகமளிக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

சிறைச்சாலைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு தற்போது தடைகள் ஏற்பட்டுள்ளதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# கலா ஓயாவில் சிக்கிய 40 பேர் பாதுகாப்பாக மீட்பு

அநுராதபுரம், நவ. 30

அநுராதபுரம் - புத்தளம் வீதியில் உள்ள கலா ஓயா பாலத்தின் அருகில் வெள்ளப் பெருக்கில் சிக்கிய பேருந்தில் இருந்த 40 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு, மீட்கப்பட்டவர்கள் நொச்சியாகம மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டனர்.

பேருந்தில் இருந்தவர்கள் அங்குள்ள வீடொன்றின் கூரையின் மீது தங்கியிருந்தனர்.

இந்த மக்களை மீட்கும் நடவடிக்கையை கடற்படையினர் முன்னெடுத்தனர்.நேற்று முன்தினம் இரவு நீரின் வேகம் காரணமாக அவர்களை மீட்கும் முயற்சி தோல்வியடைந்தது.

கடற்படையின் செயல்பாட்டுக் கப்பல் தொகுதி, கடற்படை நீச்சல் பிரிவு, விசேட படகு படைப் பிரிவு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மேலதிக படையினரும் இந்த மீட்புப் பணிகளில் இணைந்தனர். (எ)

# கோடரியால் தாக்கி இளைஞன் கொலை!

## கிண்ணியாவில் இருவர் கைது

கிண்ணியா, நவ. 30

திருகோணமலையில் கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சமச்சதீவு பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை கோடரியால் தாக்கப்பட்டு இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்டதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கிண்ணியா, சமச்சதீவைச் சேர்ந்த 28 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

இவர் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது, வீட்டுக்குள் நுழைந்த இனந் தெரியாத சிலர் அவரை கோடரியால் தாக்கியதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கோடரியுடன் இரண்டு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சடலம் கிண்ணியா மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், கிண்ணியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
30.11.2023 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## எதிரிகளை தேடும் தமிழ்த் தேசியம்

ஒரு எதிரி இல்லாவிட்டால் தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்க முடியாதா? அண்மைக்காலமாக தமிழ் அரசியல் உரையாடலில் அதிகம் ஜே.வி.பியே பிரதான இடத்தைப் பிடித்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் லண்டன் சென்றிருந்த ஜே.வி.பின் பொதுச் செயலாள ரில்வின் சில்வாவிற்கு புலம்பெயர் தமிழ் குழுவொன்று, புலிக்கொடிகள் சகிதம் எதிர்ப்பு வெளியிட்டிருந்தது. புலம்பெயர் சூழலில் இவ்வாறான எதிர்ப்புக்கள் அவ்வப்போது காண்பிக்கப்படுவது புதிய விடயமல்ல ஆனால் இலங்கை அரசாங்கத்தில் எந்தவொரு பதவியும் வகிக்காத ஒருவருக்கு எதிர்ப்பு வெளியிட்டமையானது அடிப்படையில் ஜே.வி.பிக்கான எதிர்ப்பாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும். தமிழ்த் தேசிய கட்சிகளும் அவ்வா றான எதிர்ப்பில் மகிழ்ச்சியடைந்தாகவே தெரிந்தது.

பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கில் கணிசமான வெற்றியை பெற்றிருந்தது. குறிப்பாக தமிழ்த் தேசியத்தின் ஆணிவேர் என்று கருதப்படும் யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியே பிரதான கட்சியாக வெற்றிபெற்றிருந்தது. வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசிய கட்சிகளை தேசிய மக்கள் சக்தி பின்னுக்கும்தள்ளியது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ்த் தேசியத்தின் பிரதான எதிரியாக ஜே.வி.பியை முன்னிறுத்தும் போக்கு உருவாகியது. தமிழ்த் தேசிய கட்சிகளை சேர்ந்தவர்கள் தங்களின் எதிர்ப்பு அரசியலின் ஜே.வி.பியை மையப்படுத்தியதாக திருப்பினர். ஒரு புதிய எதிரியை முன்னிறுத்துவதன் ஊடாக, தங்களின் வீழ்ச்சியுற்ற செல்வாக்கை கட்டியெழுப்ப முயற்சிக்கின்றனர். தங்களின் பலவீனங்களை அறிந்து, தங்களை மாற்றிக்கொள்ள முயற்சிக்காமல் இலகுவான வழியில் வெற்றியை தேட முயற்சிக்கின்றனர். ஜே.வி.பியை பிரதான எதிரியாக கட்டமைப்பதன் அடிப்படையான நோக்கம் இதுதான்.

எதிரியை முன்வைத்து அரசியலை கட்டமைக்கும் உபாயம், அடிப்படையில் யுத்த காலத்திற்குரியது. ஒரு பலமான எதிரியிருந் தால்தான் யுத்தத்தை தொடர முடியுமென்னும் அடிப்படையில்தான் அவ்வாறானதொரு எதிரி மைய அரசியல் கட்டமைக்கப்படுவதுண்டு. மகிந்த ராஜபக்சவின் வெற்றியை விடுதலைப் புலிகளின் தலைமை விரும்பியது அந்த அடிப்படையில்தான். ஏனெனில் மகிந்த ராஜபக்ஷ, நோர்வேயின் தலைமையிலான மேற்குலக சமாதான முன்னெடுப்பை எதிர்த்தார். விடுதலைப் புலிகள் அமைப்பும் நேர்வேயின் தலையீட்டை தங்களுக்கான ராஜதந்திரப் பொறி என்றே கருதினர். இவ்வாறானதொரு பின்புலத்தில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் வெற்றிபெற்றால் தங்களால் சமாதான முன்னெடுப்புக்களிலிருந்து விலக முடியாது.

எனவே ரணில் அதிகாரத்திலிருந்து அகற்றி, அந்த இடத்திற்கு மகிந்தவை கொண்டு வந்தால், ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் என்னுமடிப்படையில்தான் புலிகளின் அன்றைய வியூகம் இருந்தது. அதாவது, சமாதான முன்னெடுப்பையும் தோற்கடிக்கலாம் அதே வேளை யுத்தத்தையும் முன்னெடுக்கலாம். இந்தப் பின்புலத்தில்தான் மகிந்தவின் தேர்தல் வெற்றிக்கு விடுதலைப் புலிகள் அமைப்பு மறைமுகமாக உதவியது.

ஜனாதிபதித் தேர்தலை பகிஸ்கரிக்குமாறு விடுதலைப் புலிகள் அறிவித்தனர். தமிழ் மக்கள் தேர்தலில் வாக்களித்திருந்தால் நிச்சயமாக ரணிலுக்கே வாக்களித்திருப்பர். பகிஸ்கரிப்பால் மகிந்த வெற்றிபெற்றார். விடுதலைப் புலிகளின் அரசியல் கணக்கும் வெற்றிபெற்றது ஆனால் சத்திரசிகிச்சை வெற்றி ஆனால் நோயாளி இறந்துவிட்டார் என்பது போல், விடுதலைப் புலிகளின் வியூகம் வெற்றிபெற்றது ஆனால் விடுதலைப் புலிகளால் வெற்றிபெற முடியவில்லை.

இவ்வாறான எதிரிமைய அரசியல் ஜனநாயக அரசியலுக்குரியதல்ல. ஆனால் ஜனநாயக அரசியலில் தளத்திலும் சதா எதிரிகளையே தமிழ்த் தேசிய தரப்புக்கள் தேடுகின்றன. இது அடிப்படையிலேயே தவறானது. ஆட்சியிலிருப்பவர்களை எதிரிகளாக கையாள முற்பட்டால் அவர்களுடன் பேச முடியாது மாறாக யுத்தம்தான செய்யலாம். யுத்தம் செய்வதா தமிழ்த் தேசியர்களின் இலக்கு?

## வட மாகாண மர நடுகை மாதம் கார்த்திகை - 2025

“தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப்பாரியளவில் வளர்ச்சியடையும்.”
- கிரேக்கப் பழமொழி



# மண்சரிவில் சிக்கியிருந்த 5 இராணுவத்தினர் மீட்பு!

கொழும்பு, நவ. 30

நுவரெலியா - நோர்டன் பிரிட்ஜ் பகுதியில் பெய்து வரும் இடைவிடாத கன மழையின் விளைவாக, விமல சுரேந்திர அணைக்கட்டு அருகே உள்ள இராணுவச் சோதனை சாவடிக்கு முன்பாக ஏற்பட்ட மண் சரிவில் சிக்கியிருந்த ஐந்து இராணுவத்தினர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்களை லக்சபான இராணுவ முகாமின் மீட்புக்குழுவினர் மீட்டு, டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக நோர்டன்பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் நோர்டன்பிரிட்ஜ் -



கினிகத்தேன பிரதான வீதியில் ஏற்பட்ட மண்மேடு சரிவின் காரணமாக சோதனைச் சாவடி முழுமையாக மண் ணுக்குள் புதைந் துள்ளது. (அ)

## நல்லூர் பகுதி வெள்ளத்தில்!

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணம் - நல்லூர் அரசடிப்பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வீடுகளுக்கள் வெள்ளம் புகுந்துள்ளது. இந்த நிலையில் கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் குறித்த பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டு மக்களின் நிலைமைகளை பார்வையிட்டார். அத்துடன் மக்களை அவதானமாக இருக்குமாறும் கேட்டுக் கொண்டார். (அ)

## வீதியில் பாரிய வெடிப்பு!

கொழும்பு, நவ. 30

நுவரெலியா பொகவந்தலாவ கெம்பியன் இராணிகாடு பிரதான வீதியில், பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், இன்று காலை முதல் இராணிகாடு வீதி மூடப்பட்டுள்ளதாக, பொகவந்தலாவ பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக, குறித்த வீதி தாழிறங்கியதால், வீதியின் நடுப்பகுதியில் பாரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால், குறித்த வீதியின் ஊடாக பாரிய வாகனங்கள் எதுவும் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த வீதி தாழ்யிறங்கியதன் காரணமாக, இராணிகாடு, லொய்னோன், லின்போட், நோத்கோ, ஆல்டி ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்கள், பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். (அ)


## புற்றளை வெள்ள வாய்க்கால் சீரமைப்பு

யாழ்ப்பாணம், நவ. 30

நாட்டில், சீரற்ற கால நிலை தொடரும் நிலையில், யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட புற்றளை வெள்ள வாய்க்கால் அடைப்புக்களை சீராக்கும் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

புற்றளை பகுதியில் வெள்ளம் வடிந்தோட முடியாது அடைபட்டிருந்த வடிகால் தொடர்பில், பருத்தித்துறை பிரதேச சபையின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து, பிரதேச சபைச் செயலாளர் தலைமையிலான மீட்புக் குழுவினர் வடிகாலை சீர்செய்யும் பணிகளை மேற்கொண்டனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இல்லை’ என்பது தவறல்ல!

-பவித்ரா நந்தகுமார்



நம் வாழ்க்கையில் ‘ஆம், இல்லை’ என்ற சொற்களுக்கு என்றுமே அதிக முக்கியத்துவம் உண்டு. ஏனெனில்,

இது நம் செயல்களுக்கான காரணிகளாக அமைந்து விடுகின்றன. நம்முன் வைக்கப்படும் கோரிக்கைகளுக்காகவும்நிர்ப்பந்தங்களுக்காகவும் இவ்விரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்தில் ,ருக்கிறோம்.

நம்மை நோக்கி வீசப்படும் கேள்விக்கு ‘ஆம், நான் செய்கிறேன், நான் தருகிறேன், நான் வருகிறேன்...’ என்று சொல்ல வேண்டும் என காலம் காலமாக நாம் அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்.

எதையும் கேட்கும் போது ‘ஆம்’ என்று ஒப்புக்கொள்வதுதான் நல்ல பிள்ளைக்கு அழகு என்று சொல்ல

பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறோம். மேலும் ‘ஆம்’ என்பது நேர்மறை செயலாக்கம் என்றும் ‘இல்லை’

என்பது எதிர்மறை மனப்பான்மை என்றும் நம்பப்படுகிறது.இந்த மரபுக் கட்டுகளிலிருந்து சில விஷயங்களை காலத்துக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டிய காலகட்டத்தில் இருக்கி றோம். என் எழுத்தாளத் தோழமை என்னிடம் சொன்னதை இங்கு பகிர்வது

சரியாக ,ருக்கும். ஏற்கெனவே பணிச் சூழல் அதிகம் உள்ள அவரிடம், அவருக்குத் தெரிந்தவர் ஒருவர் தன் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தரும்படி கேட்டிருக்கிறார். அந்த நேரத்தில் ‘எனக்குதற்போது நேரம் ,ல்லை’ என்று சொல்ல அவருக்கு மனம் வரவில்லை. தன்னை நம்பி வந்திருக்கிறாரே என்ற கருணை உந்தித் தள்ளவும், தன்னால் முடியாது என்று சொல்ல அவர் பழகாது போகவும், ,ரண்டொரு நாள்களில் முடித்துத் தந்து விடுகிறேன் என்று சொல்லி இருக்கிறார்.

அடுத்து வந்த சில நாள்களில் அவர் முடித்துத் தர வேண்டிய சில வேலைகள் எதிர்பாராத விதமாக நீண்டு இரவுகளில் வெகுநேரம் கண் விழிக்க வேண்டியதாக இருந்தது. அடுத்தடுத்த நாள்களிலும் வெவ்வேறு அவசரவேலைகள் அவரை ஆக்கிரமித்தன் அதை முடித்து மூச்சு விடுவதற்குள் நெருங்கிய உறவினரின் துக்கச் செய்தி.

துக்கம் கடைப்பிடித்து நிமிர்வதற்குள் அவரது உடல் நலம் சற்று பாதிக்கப் பட்டது. சில நாள்களுக்காவதுபரிபூரண ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தார்.

ஆனால், அவ்வாறு எடுத்துக் கொள்ள முடியாதபடிக்கு ஒப்புக்கொண்ட மொழிபெயர்ப்புப் பணி மனதை அலைக்கழித்த வண்ணம் இருந்திருக்கிறது.

பின்னர், வேறு வழியின்றி, ஒரு பயணத்தின் போது அசாதாரண சூழலில் அவருக்கான பணியை முடித்துக் கொடுத்திருக்கிறார். இறுதியில் அவரை வருத்திக் கொண்டு செய்து கொடுக்க வேண்டியதாய்

இருந்தது. ‘இல்லை, எனக்கு தற்போது நேரமில்லை’ என்று சொல்ல முடியாமல் போன விளைவை அனுபவிக்க மிகக் கடினமாக ,ருந்ததாகச் சொன்னார்.

நம்மில் பலரும் இப்படித்தான் இருக்கிறோம். ‘,ல்லை, வேண்டாம்’ என்று சொன்னால் நம்மைத் தவறாக எண்ணி விடுவார்களோ என்று அச்சம் இதனால், உறவு நிலையில் ஏதேனும் விரிசல் விழுமோ எனதேவையில்லாமல் பயந்து அசௌகரியங்களை அனுபவிக்கிறோம் நம் நேரம் எவ்வளவு முக்கியம் என்பது

அவர்களுக்குத் தெரியாது. ஆனால், நமக்குத் தெரியும். இப்படித்தான் ‘இல்லை’ என்று சொல்ல மனம்வராமல், அந்தச் சூழ்நிலையை சரியாகக் கையாளாமல் ‘ஆம்’ என்று சொல்லி என்னை வருத்திக்கொண்டு என் சூழலை கடினமாக்கிக் கொண்ட அனுபவங்கள் எனக்கும் பல உள்ளன. இப்போதெல்லாம் இந்தப் பணியை செய்ய இயலுமா, இயலாதா எனப் பலமுறை சிந்தித்து, அதைத் தொடக்கத்திலேயே மறுத்து விடுகிறேன்.

இதனால், பல தர்மசங்கடங்களிலிருந்து தற்போது விடுதலை கிடைத்திருக்கிறது.

உண்மைதான். நம் அன்றாட வாழ்வில் ,தைப் பல ,டங்களில் நாம் பார்த்திருக்கிறோம். கைமாற்றாகபணம் கேட்ட போது ,ல்லை என்று சொல்ல மனமின்றி கடன் கொடுத்த பிறகு, நமக்கு பணம் தேவைப்படும் இக்கட்டான சூழலிலும் திரும்பக் கிடைக்காமல் கலங்கிய சில சம்பவங்கள் பலரது வாழ்வில் நடந்திருப்பதை அறிகிறோம். இதில் வலியவர், எளியவர்களுக்குச் செய்யும் உதவி குறித்து பேச்சில்லை.

அவையெல்லாம் நிச்சயமாக காலம் கருதி செய்யும் உதவிகள். வள்ளுவர் சொன்னதுபோல அவை உலகம் அளவு

பெரியவை. அத்துடன் நம் கடமைகளை, பொறுப்புகளைத் தட்டிக் கழிப்பதற்கும் விலக்கில்லை. ஆனால், பொது

வழக்குகளில், நம்மை கணக்கு வழக்கின்று சுருக்கிக் கொண்டு ‘இல்லை’ என்று சொல்லாமல் விட்டதால்ஏற்படும் மனத்தாங்கல்கள் நமக்குத்தேவையில்லை.

(தொடர்ச்சி 14 ஆம் பக்கத்தில்)

## இந்தவார ராசிபலன் 22.11.2025 - 30.11.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாசவசு வருடம் - கார்த்திகை 14
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : தசமி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சற்று மந்தமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டம் நிறைந்ததாக இருக்கும், சில இடங்களில் வேலை அழுத்தம் அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில சிரமங்களை எதிர்பார்க்கலாம், அதே நேரத்தில் வேலை மாற்றம் சம்பள உயர்வு பற்றிய பேச்சு ஏற்படலாம். வியாபாரத்தில் நிதானமான முன்னேற்றம் உண்டாகும்,

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் ஏற்ற இறக்கமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை கடுமையாக இருக்கும். சில இடங்களில் பதட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில சிக்கல்களை எதிர்பார்க்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு செயல் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் வருமானம் சற்று மந்தமாக இருக்கும். புதிய முதலீடுகளில் கவனமாக இறங்க வேண்டும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை அழுத்தம் குறைவாக இருக்கும் , சில இடங்களில் உழைப்பு கூடுதலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சுலபமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் மதிப்பு உயரும், சந்தோசம் அதிகரிக்கும்,

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மேன்மையான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் இலகுவான நிலை இருக்கும் , சில இடங்களில் இணக்கம் நிறைந்ததாக இருக்கும். உத்தியோக ரீதியாக புதிய வாய்ப்புகள் கிடைக்கும், ஆனால் எதிர்பார்த்த காரியம் உடனே நிறைவேறும்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் கொஞ்சம் அழுத்தமான நிலை உண்டாகும் , சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை உயர்வு கிடைக்கலாம்,

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சவால்கள் இருக்கும் , சில இடங்களில் எதிர்ப்புகள் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி கையிருப்பு அதிகரிக்கும்,

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை அழுத்தம் குறைவாக இருக்கும் , சில இடங்களில் உழைப்பு கூடுதலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சுலபமாக நடக்கும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் ஏற்ற இறக்கமான பலன்கள் இருக்கும். சில இடங்களில் ஏமாற்றம் இருக்கும், சில இடங்களில் போராட்டங்கள் இருக்கும். உத்தி யோக ரீதியாக சில மாற்றங்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். புதிய முயற்சிகளுக்கு நல்ல வெற்றி கிடைக்கும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டம் இருக்கும் , சில இடங்களில் உழைப்பு அதிகம் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நடந்து மன மகிழ்ச்சி தரும். புதிய முயற்சிகளில் நம்பி ஈடுபடலாம்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு சிரமங்கள் உண்டாகும் , சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய உயர்வு வரலாம், புதிய முயற்சிகளில் நம்பிக்கையாக ஈடுபடலாம்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மேன்மையான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சிறு அழுத்தம் உண்டாகும் , சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தாமதமாக நடக்கும். குழப்பங்கள் நீங்கி குதூகலம் அதிகரிக்கும்,

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் போராட்டமாக இருக்கும், சில இடங்களில் சவால் அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தள்ளிப் போகலாம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி கையிருப்பு உயரும், புதிய முயற்சிகளில் நம்பி இறங்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த மனக்குழப்பம் நீங்கும், பிள்ளைகளால் எந்த தொந்தரவும் இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவேந்தல்களை மாத்திரம் முக்கிய அரசியல் செயற்பாடாக முன்னெடுப்பதன் மூலம்

# தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களை எதுவரைக்கும் கூட்டிச்செல்லப் போகிறார்கள்?

♦ வீரகத்தி தனபாலசிங்கம்



இலங்கை முழுவதும் இயற்கையின் சீற்றத்தினால் பேரிடருக்கு உள்ளாகியிருக்கின்ற நிலைவரத்துக்கு மத்தியிலும் கடந்த வாரம் வடக்கு, கிழக்கில் மாவீரர் வாரம் முன்னென்றுமில்லாத வகையில் ஆயிரக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் உணர்வெழுச்சியுடன் கொண்டாடப்பட்டிருக்கிறது. இறுதி நாளான நவம்பர் 27 ஆம் திகதி இடம்பெற்ற பிரதான நினைவேந்தல் நிகழ்வுகளில் பெருமளவில் மக்கள் அணிதிரண்டது குறித்து செய்திகளை வெளியிட்ட சில ஊடகங்கள் விடுதலை புலிகளின் காலத்தில் கூட இந்தளவுக்கு பிரமாண்டமானதாக மாவீரர்தின நிகழ்வை காணக்கூடியதாக இருந்ததில்லை என்று கூறியிருந்தன..

விடுதலை புலிகள் இயக்கம் தொடர்ந்தும் தடைசெய்யப்பட்டிருக்கின்ற போதிலும், அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 71 வது பிறந்த தினமான நவம்பர் 26 புதன்கிழமை வடக்கு, கிழக்கில் பல்வேறு இடங்களில் அவரின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன. போரில் பலியானவர்களை நினைவுகூருவதன் பேரில் விடுதலை புலிகளை புகழ்ந்து போற்றும் நிகழ்வுகளுக்கு இடமளிக்க முடியாது என்று அரசாங்க தரப்பில் தொடக்கத்தில் கூறப்பட்ட போதிலும், பிரபாகரனின் பிறந்ததினக் கொண்டாட்டங்களை தடுப்பதற்கு பொலிசாரோ அல்லது படையினரோ எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்த பிறகு இரண்டாவது தடவையாக கொண்டாடப்பட்ட மாவீரர் வாரம் இதுவாகும். இலங்கை பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் ஒரு அறையில் இலங்கை தமிழரசு கட்சியின் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் கார்த்திகைப்பூவின் முன்னால் தீபமேற்றி நினைவேந்தல் செய்து படங்களை சமூக ஊடகங்களில் வெளியிட்டிருந்தனர்.

முன்னென்று மில்லாத வகையில் இந்த தடவை பாராளுமன்றத்தில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் பட் ஜெட் விவாதத்தில் பங்கேற்ற வேளைக ளில் மாவீரர்களை நினைவேந்திய வண் ணமே தங்களது பேச்சுக்களை ஆரம்பித் தையும் பிரபாகரனுக்கு பிறந்ததின வாழ்த்துக் கூறியதையும் காணக்கூடிய தாக இருந்தது. ஆனால், அதற்கு அரசாங் கத் தரப்பில் இருந்தோ அல்லது எதிர்க் கட்சிகள் தரப்பில் இருந்தோ எவரும் ஆட்சேபம் தெரிவிக்கவுமில்லை.

கடந்த வருடமும் கூட மாவீரர்வாரக் கொண்டாட்டங்களை அமைதியான முறையில் நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதித்திருந்தது. ஆனால், கடந்த வருடத்தை விடவும் இந்த தடவை கொண்டாட்டங்களில் கூடுதலான அளவுக்கு உத்வேகத்தை காணக் கூடியதாக இருந்தது. வடக்கு, கிழக்கில் தமிழ் அரசியல் கட்சிகள் குறிப்பாக, தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தமிழரசு கட்சியும் நினைவேந்தல்களில் தீவிரமாக பங்கேற்றன. முன்னர் இத்தகைய நினைவேந்தல்களில் பெருமளவுக்கு அக்கறை காட்டாத தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் போன்றவர்களும் கூட கடந்த வாரம் பல்வேறு இடங்களில் கொண்டாட்டங்களில் பங்கேற்றனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான இராமலிங்கம் சந்திரசேகரும் மாவீரர்களை நினைவுகூர்ந்து கருத்துக்களை வெளியிட்டிருந்தார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் போரை முழுவீச்சில் முன்னெடுப்பதற்கு தத்துவார்த்த வழிகாட்டியாகச் செயற்பட்ட ஜனதா விமுக்தி பெரமுனக்கு ( ஜே.வி.பி.) தமிழ் மக்களின் விமோசனத்துக்காக தங்களது உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை நினைவேந்தல் செய்வதற்கு எந்த தகுதியும் கிடையாது என்று பாராளுமன்றத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கண்டனம் செய்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

எது எவ்வாறிருந்தாலும், முன்னைய அரசாங்கங்களைப் போலன்றி ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உள்நாட்டுப்போரில் இறந்தவர்களை எந்தவிதமான இடையூறுமின்றி சுதந்திரமாக நினைவு கூருவதற்கு தமிழ் மக்களை அனுமதித்தது நிச்சயமாக வரவேற்கத்தக்க ஒரு செயலாகும்.

ஜே.வி. பி.யின் தாபகத் தலைவர் றோஹண விஜேவீர உட்பட அரச படைகளினால் கொல்லப்பட்ட தங்களது முன்னைய தலைவர்களையும் இரு ஆயுதக் கிளர்ச்சிகளிலும் பலியான இயக்க உறுப்பினர்களையும் வருடாந்தம் நினைவேந்தல் செய்து வரும் அரசாங்கத் தலைவர்கள் உள்நாட்டுப்போரில் உயிர்தியாகம் செய்த தமிழ்ப் பேராளிகளும் பலியான மக்களும் நினைவுகூரப்படுவதை தடுப்பது எந்த வகையிலும் நியாயமானதல்ல என்ற தர்க்கநியாயத்தின் அடிப்படையிலேயே மாவீரர்தின நிகழ்வுகளை சுதந்திரமாக நடத்துவதற்கு அனுமதிக்க தாங்களாகவே நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் எனலாம்.

ஜே.வி.பி. 1994 ஆம் ஆண்டு தொடக்கம் ' நவம்பர் வீரர்கள் தினத்தை ' அனுஷ்டித்து வருகிறது. விஜேவீர கொழும்பில் 1989 நவம்பர் 13 ஆம் திகதி கொல்லப்பட்டதால் வருடாந்தம் அன்றைய தினத்தில் அவர்கள் நினைவு நிகழ்வை நடத்திவருகிறார்கள். இறுதியாக இரு வாரங்களுக்கு முன்னர் நவம்பர் 14 கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையில் நவம்பர் வீரர்கள் தின நிகழ்வு இடம்பெற்றது.

அதேவேளை, மாவீரர் தினத்தை விடுதலை புலிகள் 1989 ஆம் ஆண்டு அனுஷ்டிக்கத் தொடங்கினர். அரசாங்க படையினருடனான மோதலில் முதன் முதலாக இயக்கப் போராளி ( சங்கர் என்ற சத்தியநாதன்) 1982 நவம்பர் 27 ஆம் திகதி கொல்லப்பட்ட காரணத்தினால் மாவீரர் தினத்தை வருடாந்தம் அனுஷ்டிப்பதற்கு அன்றைய தினத்தை அவர்கள் தெரிவு செய்தனர். பிரபாகரனின் பிறந்ததினம் நவம்பர் 26 ஆம் திகதியாகும்.

முதலாவது மாவீரர்தினம் முல்லைத்தீவு காட்டுக்குள் அனுஷ்டிக்கப்பட்ட போது வடக்கு, கிழக்கில் இந்திய படையினர் நிலைகொண்டிருந்தனர். அவர்கள் 1990 மார்ச் மாதம் முற்றாக வெளியேறியதை தொடர்ந்து விடுதலை புலிகள் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்த பகுதிகளில் மாவீரர்தின நிகழ்வுகளை விரிவுபடுத்தினர். அந்த தினத்தில் பிரபாகரன் முக்கியமான உரையை நிகழ்த்துவதும் வழக்கமாக இருந்தது.

2009 மே மாதம் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்த பிறகு ராஜபக்சாக்களின் ஆட்சியில் மாவீரர்தின நிகழ்வுகளை பகிரங்கமாக நடத்தக்கூடியதாக இருக்கவில்லை.

ஆனால், சில சிவில் சமூக அமைப்புக்களின் உதவியுடன் எளிமை யான முறையில் நினைவேந்தல் நிகழ்வு கள் ஆங்காங்கே இடம்பெற்றன. ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டதை தொடர்ந்து படிப்படியாக விரிவான முறையில் அந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுவந்தன. தற்போது பரந்தளவில் மக்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டுவரும் மாவீரர் வார நிகழ்வுகளில் தமிழ் அரசியல் கட்சிகள் தீவிரமான ஈடுபாட்டைக் காண்பிக்கின்றன.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களும் காணாமல் போனோரினதும் உயிரிழந்த போராளிகளினதும் குடும்பங்களும் இதுவரையில் தங்களுக்கு நீதி கிடைக்காத நிலையில் கவலையையும் வேதனையையும் வெளிக்காட்டுவதற்கு நினைவேந்தல் நிகழ்வுகளில் பெருமளவில் அணிதிரண்டு பங்கேற்கிறார்கள்.

ஆனால், போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு ஏற்ற முறையில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளில் அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியாமல் இருக்கும் தமிழ்க் கட்சிகள் தியாகங்களும் அழிவுகளும் நிறைந்த போராட்டகால நினைவுகளுடன் தமிழ் மக்களைக் பிணைத்து வைத்திருப்பதில் குறியாக இருக்கின்றன.

பல தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை, நினைவேந்தல்களே அவை முன்னெடுக்கின்ற பிரதான அரசி யல் செயற்பாடுகளாக இருக்கின்றன. தங்கள் சொந்தத்தில் கொள்கைகளை வகுத்து தமிழ் மக்களை வழிநடத்த முடியாத நிலையில் இருக்கும் இந்த கட்சிகள் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள சில சக்திகளின் உதவியுடன் கடந்த காலப் போராட்டங்களை நினைவுபடுத்துவதில் காலத்தைக் கடத்துகின்றன.

விஜேவீரவோ அல்லது பிரபாகரனோ விட்டுச் சென்ற இடத்திலிருந்து அவர்க ளின் போராட்டத்தை எவரும் தொடர முடியாது.

அரசியல் யதார்த் தத்தை தெளிவாக விளங்கிக் கொண்ட ஜே.வி.பி.யினர் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்து பாராளு மன்ற அரசியலின் மூலமாக இன்று அதிகாரத்தையும் கைப்பற்றிவிட்டனர். விஜேவீரவை வருடம் ஒருமுறை நினைவு கூருவதை தவிர, அவரது கொள்கைக ளைப் பற்றி அவர்கள் பெரிதாகப் பேசுவ தில்லை.

தேசிய மக்கள் சக்தி என்ற புதிய அவதாரத்துடன் இன்று ஆட்சியை நடத்துகின்ற ஜே.வி.பி. தலைவர்கள் பழைய கொள்கைகள் பலவற்றைக் கைவிட்டு உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைவரங்களுக்கு இசைவான முறையில் தங்களை மாற்றிக்கொண்டுவிட்டதாக பகிரங்கமாக கூறுகிறார்கள்.

விஜேவீர அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இரு ஆயுதக் கிளர்ச்சிகளை வெவ்வேறு காலகட்டங்களில் முன்னெடுத்தார்.

ஆனால், தோற்கடிக் கப்பட்ட பிறகு புதிய சூழ்நிலைகளில் அரசியலில் எவ்வாறு மீண்டெழுவது என்பதை அவரின் இயக்கத்தில் எஞ்சியிருந்தவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள். ஆனால் பிரபாகரன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்கு தனிநாடொன்றை அமைப்பதற்காக ஆயுதமேந்திப் போராடினார்.

ஆனால், பிரபாகரனின் இயக்கத்தைப் பொறுத்தவரை, அவ்வாறு மீண்டெழுவதற்கான வாய்ப்பு இருக்கவில்லை. விடுதலை புலிகள் இயக்கம் இலங்கையில் மாத்திரமல்ல, இந்தியா உட்பட பல்வேறு வெளிநாடுகளிலும் தொடர்ந்தும் தடை செய்யப்பட்டிருக்கிறது. விடுதலை புலிகள் இயக்கத்தின் பழைய போராளிகள் சிலர் சேர்ந்து அமைத்த அரசியல் கட்சி ஒன்று தற்போது ஜனநாயக அரசியலில் இருக்கிறது. ஆனால், அந்த கட்சியைச் சேர்ந்த எவரையும் தமிழ் மக்கள் பிரதேச சபைக்குத் தானும் இதுவரையில் தெரிவு செய்யவில்லை.

இத்தகைய பின்புலத்தில், நினைவேந்தல் அரசியலையே தொடர்ந்து முன்னெடுப்பதன் மூலம் தமிழ் மக்களை எதுவரைக்கும் கொண்டுசெல்ல முடியும் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் சிந்தித்துப் பார்க்க வேணடும். பிரதேச சபை தொடக்கம் பாராளுமன்றம் வரை நினைவேந்தலை முதன்மைப்படுத்துவதாகவே தமிழர் அரசியல் விளங்குகிறது.

இந்த கருத்துக்களை தமிழர்களின் விமோசனத்துக்காக தங்களது உயிர்களை தியாகம் செய்த போராளிகளை நிந்தனை செய்யும் நோக்கில் முன்வைக்கப்படுபவையாக வியாக்கியானம் செய்ய வேண்டியதில்லை.

அவர்களின் தியாகங்களை நினைவுகூருவதை மாத்திரம் முக்கி யமான அரசியல் செயற்பாடாக முன்னெடுப்பதன் மூலமாக தங்களது அரசியல் இயலாமையை மறைக்க முயற்சிக்கும் தமிழ் அரசியல்வாதிகளை நோக்கியவையே இந்த கருத்துக்கள்.

இறுதியாக, மாவீரர்வாரத்தை சுதந்திரமாக கொண்டாடுவதற்கு அனுமதித்ததன் மூலமாக தமிழ் மக்களுக்கு பெரியதொரு விட்டுக்கொடுப்பைச் செய்துவிட்டதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்க தலைவர்கள் நினைக்கக்கூ டாது.


இன்று அரசியலமைப்பில் இருக்கின்ற ஒரேயொரு அதிகாரப்பர வலாக்கல் ஏற்பாடான மாகாணசபைகள் முறையை புதிய அரசியலமைப்பில் ஒழித்துவிடப்போவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

ஆபத்தை உணர்ந்து தமிழ் அரசியல் தலைவர்கள் செயற்பட வேண்டும். கற்பனையில் காலத்தைக் கடத்தினால் இறுதியில் தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைக்காமல் போகும்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கும் சிவில் சமூகத்துக்கும் இடையில் கூட்டுப் பங்காண்மைக்கான புதிய வாய்ப்பு !



கலாநிதி ஜெகான் பெரேரா

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் 1325 தீர்மானத்தின் 25 வது வருடாந்த நிறைவைக் குறிக்குமுகமாக சிவில் சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத்தின் பங்கேற்பு சிவில் சமூகத்துடன் பணியாற்றுவதில் அரசாங்கத்துக்கு இருக்கின்ற ஒரு விருப்பத்தை

வெளிக்காட்டியது. இதுவரையில் அரசாங்கம் சிவில் சமூக அமைப்புக்களுடன் தன்முனைப்புடன் பணியாற்றவில்லை என்பதுடன் அவற்றின் ஆலோசனைகளையோ அல்லது பங்களிப்பையோ பெறுவதில் அக்கறையுடன் நாட்டம் காட்டவுமில்லை.

அந்த நிகழ்வில் வெளியுறவு அமைச்சர் நிகழ்த்திய உரை சிவில் சமூகத்துடனான அதன் உறுவுகளைப் பொறுத்தவரை அரசாங்கத்தரப்பில் மீள்சிந்தனைக்கான அக்கறை வெளிப்படுவதை உணர்த்தியது. அவரின் பிரசன்னத்தின் குறியீட்டு முக்கியத்துவத்தை அந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் கவனிக்கத் தவறவில்லை.

சிவில் சமூகத்துடன் பேச்சு நடத்துவதில் இருந்து அரசாங்கம் தூரவிலகியிருக்கும் போக்கில் ஒரு மாற்றத்துக்கும் கூட்டுப் பங்காண்மைக்கு வெளிப்படையான அணுகுமுறையை கடைப்பிடிப்பதில் நாட்டத்துக்கும் சாத்தியம் இருப்பதை அது உணர்த்தியது.

அரசாங்கத் தரப்பில் ஏற்படக்கூடிய இந்த மாற்றத்தை சிவில் சமூக அமைப்புக்களின் அனுபவங்களின் பின்புலத்தில் நோக்க வேண்டிய தேவை இருக்கிறது. முன்னைய அரசாங்கங்கள் அரசாங்க சார்பற்ற தன்னார்வ நிறுவனங்கள் செயலகத்தின் ஊடாக சிவில் சமூக அமைப்புக்கள் மீது தாக்குதலைத் தொடுத்தன.

குறிப்பாக கோட்டாபய ராஜபக்ச அரசாங்கம் அவ்வாறு தாக்குதலைத் தொடுத்துக்கொண்டு அதன் பதவிக்காலத்தை தொடங்கிய போதிலும், சர்வதேச சமூகத்துடன் விவகாரங்களை கையாளுவதில் பிரச்சினைகளை

எதிர்நோக்கியபோது சிவில் சமூக அமைப்புக்களை விரைவாகவே பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதுவரையில் தனது எண்ணத்தில் செயற்பட்டதே தவிர, சிவில் சமூகத்துடன் ஆலோசனை கலக்கவோ அல்லது அவற்றின் ஒத்துழைப்பை பெறுவதற்கான தனது திட்டத்தை விளக்கிக்கூறவோ இல்லை. இத்தகைய நிலைவரம் தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதில் பங்களிப்பு செய்வதற்கு சிவில் சமூகத்துக்கு இடமிருக்குமா என்பது தொடர்பில் நிச்சயமற்ற ஒரு உணர்வை உருவாக்கிறது.

அதனால், தேசிய சமாதானப் பேரவை மற்றும் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களுக்கான

மக்கள் செயற்பாட்டு அமைப்பு (பவ்ரல்) ஆகியவற்றுடன் சேர்ந்து போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கம் ஏற்பாடு செய்த 1325 தீர்மானம் தொடர்பான நிகழ்வில் பேசிய விஜித ஹேரத் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு சிவில் சமூகத்துடன் கரங்கோர்த்து செயற்படுவதற்கு அரசாங்கம் விரும்புகிறது என்று குறிப்பிட்டது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

நாடு எடுத்திருக்கும் புதிய திசை மார்க்கத்துக்கான அத்திபாரத்தை அமைப்பதில் தங்களது கவனம்

குவிந்திருந்ததன் விளைவாகவே முதல் வருடத்தில் அரசாங்கத்துக்கும் சிவில் சமூகத்துக்கும் இடையில் ஒரு தூரம்

இருந்தது என்றும் அவர் விளக்கமளித்தார். அவரது அந்த விளக்கம் அரசாங்கத்துக்கும் சிவில் சமூகத்துக்கும்

இடையிலான இதுவரையான மட்டுப்படுத்தப்பட்ட ஊடாட்டம் நிரந்தரமானதல்ல, ஒரு நிலைமாறு

காலகட்டத்துக்குரியதே என்ற நம்பிக்கை அந்த நிகழ்வில் பங்கேற்றவர்கள் மத்தியில் ஏற்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது.

பெண்களின் விவகாரங்கள் தொடர்பில் அரசாங்கம் எடுத்திருக்கின்ற புதிய திசைமார்க்கத்தையும் அமைச்சர் ஹேரத் தனதுரையில் விளக்கிக் கூறினார். அரசாங்கம் பெண்களுக்கு எதிரான குடும்ப

வன்முறைகளை தடுப்பது தொடர்பில் புதிய சட்டங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறது.

**"மாகாணங்களல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்வது தொடர்பில் சகல கட்சிகளினதும் இணக்கப்பாட்டை பெறமுடியவில்லை என்று காரணத்தின் அடிப்படையில் முன்னைய அரசாங்கங்களைப் போன்று மாகாணசபை தேர்தல்களை தொடர்ச்சியாகப் பின்போடும் தந்திரோபாயத்தை இந்த அரசாங்கமும் கடைப்பிடிக்கக்கூடும் என்ற ஒரு விசனம் இருக்கிறது."**



அத்துடன் தேசிய பெண்கள் ஆணைக் குழு ஒன்றையும் அது நியமித்திருக்கிறது.

இந்த இரு நடவடிக்கைகளும் முன்னைய அரசாங்கங்களினால் பிரேரிக்கப்பட்டவையாக இருந்த போதிலும்

பாராளுமன்றத்தில் அவற்றை நிறைவேற்றுவதற்கு அவை தவறின. பல வருடங்களாக நிறைவேற்றப்படாமல் இருந்துவந்த பெண்களின் பாதுகாப்பு தொடர்பான கடப்பாடுகளை நிறைவு செய்வதில் அரசாங்கத்துக்கு இருக்கும் விருப்பத்தை இந்த நடவடிக்கைகள் வெளிக்காட்டுவதால் இந்த நிகழ்வுப் போக்குகள் நிச்சயம் வரவேற்கப்பட வேண்டியவையாகும்.

சமாதானம் மற்றும் நல்லிணக்கச் செயன்முறைகளில் பெருமளவுக்கு வலுவூட்டப்பட்ட வகிபாகத்தை பெண்கள்கொண்டிருக்க வேண்டிய தேவையைப் பற்றியதே ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின்1325தீர்மானமாகும். மோதல்களில் பெண்கள் ஆண்களை விடவும் வித்தியாசமான அனுபவங்களைப் பெறுகிறார்கள் என்பதையும் மோதல்களுக்கு பின்னர் பேச்சுவார்த்தைகளிலும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் சமூகங்களின் மீட்சியை வடிவமைக்கும் தீர்மானங்களிலும் மெய்யான பங்கை பெண்கள் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் அந்த தீர்மானம் அங்கீகரிக்கிறது.

போரையும் சமாதானத்தையும் பற்றி மேற்கொள்ளப்படும் தீர்மானங்களின் ஒவ்வொரு மட்டத்திலும் பெண்களை உள்ளடக்க வேண்டும் என்று அது அரசாங்கங்களை கேட்கிறது. இலங்கையை பொறுத்தவரை, 1325 தீர்மானத்தின் பெறுமதி போரின் சுமையின் பெருமளவை பெண்களே தாங்குகிறார்கள் என்ற போதிலும், முறைப்படியான சமாதான மற்றும் ஆட்சிமுறைச் செயன்முறைகளில் மட்டுப்மடுத்தப்பட்ட இடத்தையே அவர்கள் தொடர்ந்தும் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் ஏற்றுக்கொள்வதிலேயே தங்கியிருக்கிறது.

நிகழ்வில் முக்கிய உரைகளை ஆற்றியவர்களில் ஒருவரான பேராசிரியை தீபிகா உடகம சர்வதேச சட்டத்தின் ஆட்சி நடப்பில் இல்லாத உலகளாவிய பின்புலத்தை மதிப்பாய்வு செய்தார். நவீன கால ஆயுத மோதல்களில் இறப்பவர்கள் அல்லது காயப்படுபவர்களில் அல்லது பாதிக்கப்படுபவர்களில் சுமார் நான்கில் மூன்று பங்கினர் பெண்களே என்பதை ஆய்வுகள் காண்பித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுபவர்களைப் பொறுத்தவரை, அனேகமாக பத்தில் ஒருவர் மாத்திரமே பெண்ணாக இருக்கிறார். மோதல்களின்போது பிரதானமாகப் பாதிக்கப்படுபவர்களாக பெண்களே இருக்கிறார்கள் என்பதையும் சமாதானம் தொடர்பான தீர்மானங்களில் பங்கேற்பதற்கு பெண்களை அனுமதிப்பதில் பெரிய இடைவெளி தொடர்ந்தும் நிலவுகிறது என்பதையும் இந்த புள்ளி

விபரங்கள் வெளிக்காட்டுகின்றன.

உலகம் ஒரு காலத்தில் ஒத்துழைப்பு, பொதுவான விதிகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் ஊடாக தகராறுகளைத் தீர்த்துக்கொள்வதில் விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் இயங்கியது. அந்த முறைமை குறைபாடுகளுடையதாக இருந்தது என்றாலும் பல நாடுகள் ஏற்றுக்கொண்ட குறிப்பிட்ட சில எதிர்பார்ப்புக்களை வகுத்தது. இன்று பொதுவான கடப்பாட்டு உணர்வு பலவீனமடைந்து கொண்டிருக்கிறது.

பலம்பொருந்திய நாடுகள் கூட்டுக் கோட்பாடுகள் அல்லது உலக அமைப்புக்களின் அதிகாரம் ஆகியவற்றுக்கு பெருமளவுக்கு மதிப்புக்கொடுக்காமல் தங்களது உடனடி நலன்களின் அடிப்படையில் செயற்படும் போக்கு அதிகரித்து வருகிறது.

அதன் விளைவாக, ஒரு காலத்தில் மோதல்களை மட்டுப்படுத்த அல்லது சர்வதேச கடப்பாடுகள் மதிக்கப்படுவதை ஊக்குவித்த விதிகள் பெருமளவுக்கு பின்பற்றப்படாத ஒரு போக்கு வளருகிறது. அது உலக ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்ற ஒரு உணர்வை தோற்றுவிக்கிறது.

இத்தகைய பின்புலத்தில், தற்போதைய ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் பதவிக்காலம் இவ்வருட இறுதியில் முடிவடையவிருக்கும் நிலையில், புதிய செயலாளர் நாயகமாக பெண் ஒருவர் வரவேண்டும் என்றுஇலங்கை குரல்கொடுக்க வேண்டும் என்ற யோசனையை பேராசிரியை தீபிகா உடகம முன்வைத்தார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் 1325 தீர்மானம் வலியுறுத்தும் விழுமியங்களுக்கு பெண்கள் கொண்டுவரக்கூடிய அனுபவங்களையும் உள்நோக்கையும் பிரதிபலிக்கக்கூடிய ஒரு தலைமைத்துவத்தில் இருந்துஉலக ஆட்சிமுறை பயனடையும் என்பது அவரது வாதமாக இருந்தது. பெருமளவுக்கு அனைத்துத் தரப்புகளையும் அரவணைக்கும் பல்தரப்பு முறைமை ஒன்று தொடர்பில் இலங்கைக்கு இருக்கும் கடப்பாட்டின் ஒரு அங்கமாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகமாக பெண் வரவேண்டும் என்ற யோசனைக்கு குரல்கொடுக்க முடியும்

என்றும் அவர் கூறினார்.

ஆனால், இலங்கை முதலில் நாட்டில் ஆழமாக வேரூன்றியிருக்கின்ற பெண்கள் மீதான ஆணாதிக்கத்தைகையாள வேண்டிய தேவை இருக்கிறது. உலகின் பல பாகங்களில் குறிப்பாக, தெற்காசிவில் ஆணாதிக்கம் ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆணாதிக்கத்தை விளங்கிக் கொள்வதற்கான ஒரு வழி

பெரும்பாலான அதிகாரத்தை ஆண்கள் தங்களது கைகளில் வைத்துக்கொண்டு, பெண்கள் தலைமைத்துவப் பாத்திரங்களில் அன்றி துணையான பாத்திரங்களை வகிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற ஒரு முறைமையாக அதைப் பார்ப்பதேயாகும்.

பெண்களின் படிப்பறிவு ஆண்களை விஞ்சியதாக இருக்கின்ற போதிலும், உலகின் முதல் பெண் பிரதமரைத் தெரிவுசெய்த நாடாக இருக்கின்ற போதிலும், இலங்கையில் ஆட்சிமுறையிலும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைகளிலும் பெண்களின் பாத்திரம் கவலைக்குரிய வகையில் போதுமானதாக இல்லை.

மாலைதீவைத் தவிர, தெற்காசியாவைப் பொறுத்தவரை, இலங்கையில் பாராளுமன்றத்தில் பெண்களின்

விகிதாசாரம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. தற்போது பிரதமர் ஒரு பெண்ணாக இருக்கின்ற போதிலும், 23 பேரைக் கொண்ட அமைச்சரவையில் மூவர் மாத்திரமே பெண்களாக இருக்கிறார்கள்.

பெண்கள் மிகச்சிறிய சிறுபான்மையினராகவே அமைச்சரவையில் உள்ளனர். உள்ளூராட்சி மட்டத்தில்,பெண்களுக்கு 25 சதவீத கோட்டா சட்டரீதியாக நிர்ணயிக்கப்பட்ட காரணத்தினால், கணிசமான எண்ணிக்கையில் அவர்களது பிரசன்னம் காணப்படுகிறது. ஆனால், உள்ளூராட்சி சபைகளில் பெண்கள்

அதிகாரமற்றவர்களாகவே பெரும்பாலும் இருக்கிறார்கள்.

தேர்தல் முறையில் உள்ள விநோதத்தின் விளைவாக, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் ஊடாக

தெரிவு செய்யப்பட்ட பெண்களில் பெரும்பாலானவர்கள் உள்ளூராட்சி சபைகளில் எதிர்க்கட்சி தரப்பிலேயே இருக்கிறார்கள். அதனால், ஒரு மட்டங்களில் அவர்கள் அதிகாரம் குறைக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஒன்று ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்ணாக இருப்பது, மற்றையது சபைகளில் எதிர்க் கட்சி தரப்பில் இருப்பது.

பேராசிரியர் தீபிகாவின் சவாலுக்கு இலங்கை முகங்கொடுப்பதாக இருந்தால், ஐக்கிய நாடுகள் சபையின் அடுத்த செயலாளர் நாயகமாக ஒரு பெண் வரவேண டும் என்று குரல் கொடுப்பதாக இருந்தால்,மேற்கூறப்பட்ட கட்டமைப்பு ரீதியான தடைகளை அகற்றுவதில் கருத்தூன்றிய கவனத்தை செலுத்த வேண்டும்.

முதலில் உள்நாட்டில் நிலைவரங்களைச் ஒழுங்காகச் சீர்செய்ய வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு மட்டத்திலும் தீர்மானத்தை எடுக்கும் பதவி நிலைகளில் கணிசமான எண்ணிக் கையில் பெண்கள் இருப்பதை உறுதிசெய்ய வேண்டியது அவசியமாகும். உள்நாட்டில் சமத்துவத்தைப் பேணுவதில் முன்னேற்றத்தைக் காண்பிக்காமல் உலகில் சமத்துவத்துக்காக அழைப்பு விடுப்பது பாசாங்குத்தனமானதாக தோன்றும்1325 தீர்மானம் தொடர்பான நிகழ்வில் அமைச்சர் ஹேரத் தீர்மானம் மேற்கொள்ளும்பதவி நிலைகளில் மூன்றில் ஒரு பங்கை கொடுப்பதற்கு நோக்கம் கொண்டிருப்பதாக பேசினார்.பெண்களுக்கு 25 சதவீத கோட்டாவைக் கொண்டிருக்கும் மாகாண சபைகளுக்கான புதிய தேர்தல் முறையை

பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதை துரிதப்படுத்தி பெண்களுக்கு அதிகாரமளிப்பது தொடர்பில் அரசாங கம் அதன் நம்பகத்தன்மையை காண்பிப்பதற்கு இது ஒரு சரியான சந்தர்ப்பமாகும்.

(தொடர்ச்சி 14 ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி - எதிர்ப்புவாத தமிழ்த் தேசியம்: புரிந்து கொள்ள வேண்டிய சில விடயங்கள்!



- யதீந்திரா

அரசியல் நகர்வுகளின் விளைவுகளை மதிப்பிடும் போது எப்போதுமே சாதகம் மற்றும் பாதகம் என்னுமடிப்படையில் மதிப்பிட வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு அரசியல் செயற்பாடுகளும் நிச்சயம் விளைவுகளை தரும் ஆனால் அவை நமக்கு சாதகமானதா அல்லது பாதகமானதா என்பதையே நாம், உற்று நோக்க வேண்டும். அந்த அடிப்படையில் யுத்தம் முடிவுற்று பதினாறு ஆண்டுகள் முடிவுற்றுவிட்டது. இந்தக் காலத்தில் ஈழத் தமிழர் அரசியலின் பெயரால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் சாதகமான விளைவு என்ன என்று கேட்டால் எவரிடமும் பதில் இல்லை. இந்த அடிப்படையில்தான் நாம் இப்போதுள்ள அரசியல் செயற்பாடுளை மதிப்பிட வேண்டும்.

சில தினங்களுக்கு முன்னர் டில்வின் சில்வா இங்கிலாந்து சென்றிருந்தார். இதன் போது ஒரு குழுவினர் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். இலங்கையின் அரச தலைவர்கள் இங்கிலாந்து செல்கின்ற போது இவ்வாறான எதிர்ப்புக்கள் காண்பிக்கப்பட்டிருந்தன. ஆனால் டில்வின் சில்வா எந்தவொரு அரச பதவிகளிலும் இருந்த ஒருவரல்ல. ஜே.வி.பியின் பொதுச் செயலாளரான டில்வின், ஜே.வி.பி ஆட்சியை கைப்பற்றியிருக்கும் நிலையில் அரசியல் அரங்கிற்கு வந்திருக்கின்றார். இந்த எதிர்ப்பை எவ்வாறு புரிந்து கொள்வது? டில்வின் சில்வாவை எதிர்ப்பது என்பது அடிப்படையில் ஜே.வி.பியை எதிர்ப்பதுதான். ஜே.வீ.பி எதிர்ப்பு தமிழ்த் தேசிய அரசியலின் சமீபத்தைய உற்பத்தியாகும். ஏனெனில், யுத்தத்திற்கு பின்னரான ஈழத் தமிழர் அரசியலில், ஜே.வி.பி எதிர்ப்பு ஒரு பிரதான போக்காக இருந்ததில்லை. ராஜபக்ச எதிர்ப்பே பிரதானமாக இருந்தது.

ஆனால் ஜே.வி.பியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கில் கணிசமான தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றதைத் தொடர்ந்துதான் தமிழ்த் தேசியவாதிகள் என்போர் ஜே.வி.பியின் பக்கமாக திரும்பினர். நாடாளுமன்றத் தேர்தலின் போது ஜே.வி.பிக்கு வாக்களிக்க வேண்டாம் என்று அனைத்து தமிழ் கட்சிகளுமே பிரச்சாரம் செய்திருந்தன. தங்களுக்குள் குடும்பி களை பிடித்துக் கொள்ளும் தமிழ் கட்சிகள் ஜே.வி.பிக்கு எதிரான பிரச்சாரத்தில் ஒன்றாகவே இருந்தனர். அதன் பின்னரும் தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கில் குறிப்பாக வடக்கில் பிரதான கட்சியாக வெற்றிபெற்றது. தோல்வியுற்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களோடு ஒப்பிட்டால், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் வெற்றிபெற்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆற்றலிலும் சரி, அனுபவத்திலும் சரி ஒப்பிட்டு நோக்குவதற்கான தகுதியைக் கூட பெறாதவர்கள். அனுரகுமார திசாநாயக்க என்னும் ஒருவர் தொடர்பான தமிழ் அபிப்பிராயம் தேசிய மக்கள் சக்திக்கான வாக்குகளாக மாறியது. இந்தப் பின்புலத்தில்தான் உள்ளூராட்சித் தேர்தலில் எப்படியாவது தேசிய மக்கள் சக்தியை வடக்கு கிழக்கில் கீழ் நிலைக்குத் தள்ள வேண்டும் என்பதில் தமிழ் கட்சிகள் தங்களுக்குள் கடுமையாக உழைத்தன.

ஜே.வி.பி - எதிர்ப்பு தமிழ்த் தேசிய அரசியலை இப்படித்தான் புரிந்து கொள்ள வேண்டும். தங்களின் பலவீனத்தை அறிவதைவிடுத்து ஒரு புதிய எதிரியை முன்னிறுத்தும் வேலையையே தமிழ் தேசிய கட்சிகள் செய்தன. இங்கு அடிப்படையில் கவனிக்க வேண்டிய விடயம் வேறு. அதாவது. அனுரகுமார திசாநாயக்க என்பது தமிழ் மக்கள் மத்தியில் எப்போதுமே உச்சரித்திராத பெயர். அவர் தொடர்பில் ஆதரவாகவோ அல்லது எதிராகவோ தமிழ் மக்கள் மத்தியில் எந்தவொரு கரிசனையும் இருந்திருக்கவில்லை ஆனால் அவ்வாறான ஒருவர் தொடர்பில் நாடு தழுவியதாக ஏற்பட்ட அரசியல் அலையில், தமிழ் மக்கள் அந்தப் பக்கமாக சென்றிருக்கின்றார்கள் என்றால் - பிரச்சினை ஜே.வி.பி அல்ல மாறாக தமிழ்த் தேசியமாகும். தமிழ் கட்சிகள் முன்னிறுத்திய தேசியம் அந்தளவிற்கு பலவீனமாக இருந்திருக்கின்றது என்பதாகும். ஒரு அலையில் அள்ளுண்டு செல்லும் நிலையில்தான் தமிழ் தேசியம் இருக்கின்றது என்றால் அது பற்றித்தான் தமிழ் தேசியர்கள் கவலைப்பட வேண்டும். அந்த நிலைமையை எவ்வாறு மாற்றுவது என்றுதான் சிந்திக்க வேண்டும்.

**ஜே.வி.பியை ஸ்தாபித்த அதன் தலைவர் ரோகண விஜயவீர கொல்லப்பட்டார். சோமவன்ச அமரசிங்க, டில்வின் சில்வா, அனுரகுமார திசநாயக்க என்னுமடிப்படையில் அவர்கள் பயணம் தொடர்கின்றது. அவர்களது வளர்சியை நோக்கினால் முன்னைவர்களிட மிருந்து பின்னையவர்கள் மாறுபடுகின்றனர். மாறியதால் தான் அவர்களால் ஆட்சிக்கு வர முடிந்தது.**



ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி தென்னிலங்கை அரசியலில் ஒரு மாற்றமாக நோக்கப்படுகின்றது. அதற்கு வலுவான காரணம் உண்டு. ஏனெனில் இதுவரை கால இலங்கைத் தீவின் அரசியல் என்பது, ஒரு சில குடும்பங்களின் கட்டுப்பாட்டில்தான் இருந்தது. ஜே.வி.பியின் எழுச்சியானது அந்தப் போக்கில் ஒரு தலைகீழ் மாற்றமாகும். இந்த அடிப்படையில் நோக்கினால் முதல் முதலாக கொழும்பின் உயரடுக்கினரிடமிருந்து தென்னிலங்கையின் அரசியலானது, அடித்தள மக்கள் மத்தியிலிருந்து வந்தவர்களிடம் சென்றிருக்கின்றது. ஆனாலும் ஜே.வி.பிக்கு ஒரு கடந்த காலம் உண்டு. தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை எதிர்த்த வரலாறும் ஜே.வி.பிக்குண்டு. ஏனைய தென்னிலங்கை கட்சிகள் போன்று ஜே.வி.பியும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டில்தான் இருந்தது.

சந்திரிகா குமாரதுங்கவோடு இணைந்து ஆட்சியதிகாரத்தில் பங்குகொண்டது. அந்தக் காலத்தில் ரணில் தலைமையிலான சமாதான முன்னெடுப்புக்களை ஏகாதிபத்தியத்தின் நீட்சி என்னுமடிப்படையில் பிரச்சாரங்களை மேற்கொண்டது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான ராஜபக்சவின் இறுதி யுத்தத்ததை ஆதரித்தது. விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான இறுதி யுத்தத்தின் போது ஜே.வி.பி ராஜபக்சவுடன் நின்றதா என்றால் நிச்சயமாக நின்றது. டில்வின் சில்வாவின் வார்த்தையில் கூறுவதனால் - "பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்த வெற்றி தொடர்பில் 100 பக்கங்களில் ஒரு நூலை எழுதினால் அதில் 75 பக்கங்களில் மட்டும்தான் அரசாங்கம் தெரியும்." விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது, யுத்த களத்திற்கு வெளியில், ஜே.வி.பியின் பங்களிப்பு இருந்தது என்பதை புரிந்து கொள்ள இதற்கு மேல் ஆதாரங்கள் தேவையில்லை.

இந்த இடத்தில் ஒரு முரண்பாடான அரசியல் கூறும் உண்டு. அதாவது, விடுதலைப் புலிகளும் ஜே.வி.பியும் ஒருவருக்கொருவர் எதிர்த்துருவமாக இருந்த போதிலும் கூட, இருவரது அரசியல் தேவைகளும் சில இடங்களில் ஒரு புள்ளியில் சந்தித்திருந்தன. இருவருமே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தனர். இந்திய அமைதிப் படையை நாட்டை விட்டு அகற்ற வேண்டும் என்னும் நிலைப்பாட்டில் இருந்தனர். ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு நேரடியாக இந்தியப் படைகளோடு சண்டையிட்டது போன்று ஜே.வி.பி செயற்படவில்லை. ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியத் தலையீட்டை அகற்ற வேண்டும் என்று விடுதலைப் புலிகள் போன்றே, ஜே.வி.பியும் இந்தியாவின் தலையீட்டை எதிர்த்தது.

2005 ஜனாதிபதி தேர்தலின் போது ஜே.வி.பி மகிந்த ராஜபக்சவிற்கு ஆதரவாகவே செயற்பட்டது. மறுபுறம் விடுதலைப் புலிகள் இயக்கம் மகிந்த ராஜபக்சவின் வெற்றியையே விரும்பியது. மகிந்த ராஜபக்சவை யதார்த்தவாதி என்று கூறியது ஜே.வி.பி அல்ல மாறாக பிரபாகரன். ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிப்பதன் மூலம்தான் நோர்வேயின் தலைமையிலான சமாதான பேச்சுவார்த்தையை முடிவுக்கு கொண்டுவர முடியும் என்பதில் விடுதலைப் புலிகள் அமைப்பு உறுதியாக இருந்தது போன்றுதான், ஜே.வி.பியும் உறுதியாக இருந்தது. அதனால்தான் இருவருமே எதிர்த்துருவங்களாக இருந்த போதும் ராஜபக்சவின் வெற்றியை விரும்பினர். இந்தியப் படைகளை வெளியேற்ற வேண்டும் என்பதில் எவ்வாறு விடுதலைப் புலிகளும் பிரேமதாசவும் இணைந்து செயற்பட்டனரோ - அவ்வாறுதான் மேற்குலகின் சமாதான முன்னெடுப்பை தோற்கடிப்பதில் விடுதலைப் புலிகளும் ஜே.வி.பியும் எதிர்த்துருவங்களாக, ஒரு புள்ளியில் சந்தித்தனர். இருவருமே தங்களின் நலன்களில் இருந்து வேறு வேறு கணக்குகளை போட்டுக்கொண்டனர். விடுதலைப் புலிகள் தோற்றுவிட்டனர். ஜே.வி.பி அதன் பயணத்தில் வென்றுவிட்டது.

இன்று ஜே.வி.பி எதிர்ப்பை முன்னிலைப்படுத்தி தமிழ்த் தேசியத்தை தொடர விரும்பும் தரப்புக்கள் இவ்வாறான விடயங்களை ஆராய்வதில்லை. விடுதலைப் புலிகள் வெற்றிக்கான கணக்குகளை போட்டது போன்றுதான் விடுதலைப் புலிகளை வீழ்த்த வேண்டும் என்று எண்ணிய தரப்புக்களும் வெற்றிக்கான கணக்கை போட்டுக்கொண்டன. இப்போது தமிழர் தரப்புக்கள் புரிந்து கொள்ள வேண்டியது யுத்த காலம் பற்றியதல்ல மாறாக, யுத்த காலத்தை அடிப்படையாகக் கொண்டு, யுத்தத்திற்கு பின்னரான அரசியலை கையாள முடியாது என்பதைத்தான். உலகில் எங்கு எதைப் பேசினாலும் இறுதியில் கொழும்புடன் நீங்கள் பேசியாக வேண்டும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பான ஆதரவு நிலைப்பாட்டிலிருந்து இன்றைய அரசியலை நோக்கினால், அது என்றுமே பயனுள்ள அரசியலாக இருக்காது. ஜே.வி.பி விடுதலைப் புலிகளை எதிர்த்த ஒரு அமைப்பு என்னும் பிரச்சாரங்களை முன்னெடுக்க விரும்பினால், தென்னிலங்கையிலுள்ள எந்தவொரு கட்சியுடனும் தமிழர்கள் பேச முடியாது. அனைவருமே விடுதலைப் புலிகளின் வீழ்சிக்காக செயற்பட்டவர்கள்தான். இன்று நீங்கள் எந்த மேற்கு நாடுகளில் எல்லாம். புலிக் கொடிகளை அசைத்து மகிழ்கின்றீர்களோ அங்கெல்லாம் விடுதலைப் புலிகளின் அமைப்பின் பெயர் பயங்கரவாதிகள். யுத்தம் முடிவுற்று பதினாறு ஆண்டுகள் சென்ற பின்னர் கூட, புலிகள் மீதான உத்தியோகபூர்வ தடை நீக்கப்படவில்லை. அவ்வாறாயின் அந்த நாடுகளுடன் நாங்கள் பேச முடியாதென்று வாதிடலாமா? தவிர, கடந்த 75 ஆண்டுகால ஆட்சியில், தமிழ் மக்களுக்கு எதிரான பல்வேறு அநியாயங்களுக்கு பொறுப்பான ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச முடியும் என்றால் - ஏன் ஜே.வி.பியுடன் பேச முடியாது?


வரலாற்றின் தவறுகளை மறப்போர் அதனை மீளவும் செய்யச் சபிக்கப்பட்டவர்களாவர். இது ஒரு அமெரிக்க சிந்தனையாளரின கூற்று. இந்த மொழிபெயர்ப்பு, ஈரோஸ் இயக்கத் தலைவராக இருந்து பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்போடு இணைந்து கொண்ட, க.வே.பாலகுமாரனுடையது. சிங்களவர்கள் வரலாற்றை அறியவில்லை என்னும் அடிப்படையில்தான் பாலகுமார் இந்தக் கூற்றை பயன்படுத்தியிருந்தார். இறுதியில் இது தமிழர்களுக்கே பொருந்திப் போனது, இப்போதும் பொருத்திப் போகிறது. காலம் தோறும் பொருந்தி விடுமோ என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. ஜே.வி.பியை ஸ்தாபித்த அதன் தலைவர் ரோகண விஜயவீர கொல்லப்பட்டார். சோமவன்ச அமரசிங்க, டில்வின் சில்வா, அனுரகுமார திசாநாயக்க என்னுமடிப்படையில் அவர்கள் பயணம் தொடர்கின்றது. அவர்களது வளர்சியை நோக்கினால் முன்னைவர்களிடமிருந்து பின்னையவர்கள் மாறுபடுகின்றனர். மாறியதால்தான் அவர்களால் ஆட்சிக்கு வர முடிந்தது. அவர்கள் ஆட்சியில் நீடிப்பது, வீழ்வதெல்லாம் அவர்களின் பிரச்சினை. ஆனால் நாங்கள் மாற்றங்களை புரிந்து கொள்கின்றோமா? எங்களால் மாற முடிந்ததா? இல்லையென்றால் ஏன்? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அனுர அரசாங்கத்தின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை சரிந்து செல்கிறதா? இல்லையா?



- கந்தையா அருந்தவபாலன்-

தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பையேற்று ஒரு ஆண்டு கடந்து விட்டது. கடந்த தேர்தலில் நாட்டின் ஏனைய பகுதிகளைப் போலவே வடக்கு கிழக்கு மக்களும் இந்த அரசாங்கத்தை அமைப்பதில் வரலாற்றில் என்றுமில்லாதவாறு அதிகளவிலான வாக்குகளை வழங்கி இரு மாகாணங்களிலும் ஒட்டு மொத்தத் தமிழ்க் கட்சிகளைவிடக் கூடுதலான ஆசனங்களைப் பெறுவதற்கு துணைநின்றனர். ஒருபுறத்தில் முன்னைய

ஆட்சியாளர்களின் மீதான வெறுப்பும், தமிழ்க் கட்சிகளின்மீதான அதிருப்தியும் மறுபுறத்தில் அனுர கூறிய மாற்றத்தின் மீதான நம்பிக்கையும் வடக்கு கிழக்கில் இவ்வாறானதொரு வரலாற்று

மாற்றம் ஏற்பட வழிவகுத்தது என்பது அறிந்த ஒன்றே. அவ்வாறு நம்பிக்கை வைத்த தமிழ் மக்களின்

எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதில் இந்த அரசாங்கம் முன்னேறியுள்ளதா? அல்லது பின்னடைவைக்

கண்டுள்ளதா? இவை தொடர்பாக தமிழ் மக்களின் இன்றைய நிலைப்பாடு என்ன?

தமிழ் மக்கள் இந்த ஆட்சியாளரிடம் மட்டுமன்றி எந்த ஆட்சியாளரிடமும் எதிர்பார்க்கும் விடயங்கள் பொதுவானவை. ஆனால் அவை தொடர்பாக இந்த ஆட்சியாளரிடம் வைத்த எதிர்பார்ப்பு மட்டும் வேறானது.

ஆட்சியாளரிடம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். ஒன்று வழமையான ஆட்சி நிர்வாக நடைமுறைகளினூடாக நிறைவேற்றக்கூடியவை. இரண்டாவது அரசியலமைப்பில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துதல். மூன்றாவது அரசியலமைப்பு மாற்றமொன்றினூடாக

நிறைவேற்றவேண்டிய நியாயமான அரசியல் உரிமைகள். இவற்றுள் புதிய அரசியலமைப்பு மற்றும்

தற்போதைய அரசியலமைப்பிலுள்ள சில விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் இந்த அரசாங்கத்துக்கு இருக்கக்கூடிய சவால்களைத் தமிழ் மக்கள் புரிந்து கொண்டிருப்பினும் ஏனைய விடயங்களை விரைந்து நடைமுறைப்படுத்துவது மட்டுமன்றி அவற்றை முன்னெடுப்பதில் காட்டப்படும் ஆர்வம் என்பன அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையைத் தீர்மானிக்கும். அத்துடன் தமிழ் மக்கள் விரும்பாத நடவடிக்கைகளைஅரசாங்கம் முன்னெடுக்காதிருப்பதும் இதனுள் அடங்கும். இவ்விடயங்களில் அரசாங்கம் திருப்தியாகச் செயற்படுமானால் அரசாங்கத்தின்மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை தொடருவதற்கான வாய்ப்பு

இருக்கும். ஆனால் இவ்விடயங்கள் கூட ஐயத்துக்குரியவையாக மாறும் போது சவாலுக்குரிய விடயங்கள்

தொடர்பாக தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளவேண்டுமென எதிர்பார்க்க முடியாது.

இந்த ஆட்சியாளரின் கடந்த ஒருவருடகால முன்னெடுப்புகளை நோக்கும் போது முன்னைய ஆட்சியாளர்கள்

போன்று அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தலாம் என்று இந்த அரசாங்கமும் கருதுகின்றதா என்ற ஐயம் தமிழ் மக்களிடம் எழுந்திருப்பது மட்டுமன்றி அது கூடப் பேச்சளவிலேயே அதிகம் இருப்பதாக நோக்கப்படுகின்றது. நிறைவடையவுள்ள இவ்வாண்டுக்கான வரவு செலவுத்

திட்டத்தில் வடக்கு கிழக்கில் சில சுட்டிப்பான அபிவிருத்தித் திட்டங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன என்றாலும் அவை தொடர்பான செயற்றிட்ட முன்னேற்ற நடவடிக்கைகள் தொடர்பில் இதுவரை செய்திகளில்லை.

அண்மையில் மண்டைதீவில் சர்வதேச துடுப்பாட்டக் களம் ஒன்றை நிறுவுவதற்கான அடிக்கல் ஜனாதிபதியால் நிறுவப்பட்டது. அதுகூடச் சரியான முறையில் திட்டமிடப்படாத ஒன்று என்பது செய்திகளினூடாக

வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் அபிவிருத்தி தொடர்பான தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு இந்த

**"தமிழ் மக்களின் நம்பிக்கையைத் தக்க வைப்பதற்கு அனுர தரப் பினர் தாங்கள் முன்னைய ஜே.வி.பியிலிருந்து வேறானவர்கள் என் பதை நிரூபிக்க இன்னும் கடின முயற்சி எடுக்க வேண்டியுள்ளது."**

விளையாட்டுக்களமா? இல்லை. தமிழ்ப் பிரதேசங்களின் உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருமானம் என்பவற்றைஉயர்த்தக்கூடிய திட்டங்களையே மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

இந்தவகையில் வடக்கில் எதிர்பார்க்கப்படும் திட்டங்களில் முக்கியமானவை காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி சர்வதேச விமான நிலையம் என்பவற்றின் மேம்பாடு. இவற்றிற்குத் தேவையான நிதிகளை இந்தியா தானாக வழங்க முன்வந்த போதும் அதைத் தட்டிக்கழிப்பதுடன் அதற்கு வேறு சப்பைக் கட்டுக் காரணங்களும் இத்துறைக்கான முன்னாள் அமைச்சர் பிமல் இரத்நாயக்காவால் கூறப்பட்டதை மக்கள் அறிவர்.

இவ்வாறான திட்டங்களுக்கு உதவி வழங்கும் நாடுகள் அல்லது நிறுவனங்கள் தமக்குச் சாதகமாக அணுகுவது இயல்பு.

ஆனால் கொழும்புத் துறைமுகத்தின் முனையங்களை இதுபோல இந்தியா உட்பட்ட நாடுகளுக்கு வழங்கப்பட

முடியுமானால் காங்கேசன்துறையை ஏன் வழங்கமுடியாது என்ற கேள்விக்குச் சரியான பதில் இல்லையெனில் அரசாங்கத்தின்மீது ஐயம் எழுவது தவிர்க்கமுடியாத ஒன்று. இவை போன்று முன்னுரிமையளிக்கப்படவேண்டிய பலவிடயங்களைப் புறமொதுக்கிவிட்டு வேறுசில ஜனரஞ்சகமான அறிவிப்புகளை மட்டும் வெளியிடும்போது மக்கள் அதனை தமிழ்ப் பிரதேசங்கள் பொருளாதார ரீதியாக பலமடைவதை அரசாங்கம் விரும்பவில்லையோ என்ற ஐயத்துடன் பார்க்கின்றனர். இதேவேளை மக்களால் விரும்பப்படாத, குறித்த பிரதேச மக்களுக்கு

நேரடியாக நன்பமை தராத காற்றாலை மின்சாரத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் அரசாங்கம் உறுதியை வெளிப்படுத்துகிறது. அரசாங்கத்தின் இவ்வகையான அணுகுமுறை தமது எதிர்பார்ப்புகளைப் புறந்தள்ளுவதாகவே தமிழ் மக்கள் கருதத் தொடங்கியுள்ளனர்.

மேலும் இராணுவக் குறைப்பு, முகாம்களை அகற்றல், தனியார் காணிகளின் விடுவிப்பு போன்றவை அரசாங்கத்தினால் இலகுவாக நடைமுறைப்படுத்தக் கூடியவை. இவற்றில் குறிகாட்டியாக சில நடவடிக்கைகள்

அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டிருந்தாலும்கூட அவற்றைத் தொடர்ந்து படிப்படியாக அகற்றுவதற்கான

எந்தவொரு திட்டங்களும் அதனிடம் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களின் பிரதான தொழிற்றுறையான கடற்றொழிலை மேம்படுத்துவதற்கான எந்தவொரு முன்மொழிவும் இல்லை

என்பதற்கப்பால் இலங்கை இந்திய மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எந்தவொரு உருப்படியான முன்னெடுப்பும் இதுவரையில் இல்லை. கடற்றொழில் அமைச்சராக மக்களுக்கு நன்கு அறியப்பட்ட ஒரு தமிழர் இருந்தும்கூட எந்தப்பயனும் இல்லை. அவர் இப்பிரச்சினை தொடர்பாக முன்னுக்குப்பின் முரணாகக் கருத்துகளை வெளியிட்டு வருவதைக் காணமுடிகிறது. அதிலிருந்து இப்பிரச்சினை தொடர்பாக எந்தவொரு

உருப்படியான திட்டமும் அவர்களிடம் இல்லை என்பதும் இவ்விடயத்தில் முன்னைய அரசாங்கங்களைப் போலவேகாலங்கடத்த நினைப்பதாகக் கருதப்படுகிறது. கடற்றொழில் அமைச்சர் வடக்கில் அதிலும் குறிப்பாக

யாழ்ப்பாணத்தில் கூடிய காலத்தைக் கழித்தாலும்கூட அமைச்சு சார்ந்த விடயங்களில் கவனஞ் செலுத்துவதை விடஅரசியல் சார்ந்த விடயங்களிலேயே அதிக கவனஞ் செலுத்துவதைக் காணமுடிகிறது. கடற்றொழில் தமிழ்

மக்களுக்கு மட்டுமல்ல இலங்கையின் பிரதான உற்பத்தித்துறையாக இருந்தும் அந்த அமைச்சுக்கு மிகக் குறைந்த

நிதியே அடுத்தாண்டுக்கான (2026) வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இது அந்த அமைச்சின் பலவீனத்தையே காட்டி நிற்கிறது.

தமிழ் மக்களின் இன்னொரு முக்கிய எதிர்பார்ப்பு மாகாணசபைத் தேர்தலாகும். அரசியலமைப்பில்உள்ளவாறான அனைத்து அதிகாரங்களையும் மாகாணசபைகளுக்கு வழங்கி அதனைப் பலப்படுத்துவது ஓர் இடைக்காலத்

தீர்வாக அமையமெனினும் அதனை உடனடியாக நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்களை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். ஆனால் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் அதுபோல அரசாங்கத்துக்கு பெரிய

தடைகள் எதுவுமில்லை. தனது தேர்தல் வாக்குறுதிகளுக்கமைய உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதில் அரசாங்கத்துக்கிருந்த ஆர்வம் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் இருப்பதாகத் தெரியவில்லை.

அத்தேர்தல் தொடர்பாக உள்ள ஒரேயொரு தடை அது தொடர்பான முன்னைய சட்டங்களாகும். அச்சட்டங்களை மாற்றியமைப்பதில் இந்த அரசாங்கத்துக்கு எந்தச் சிரமமும் இருக்கப் போவதில்லை. பாராளுமன்றில் மூன்றிலிரண்டுக்கு மேற்பட்ட பலம் இருப்பதுடன் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் அதற்கான தனது ஆதரவைத் தெரிவித்துமுள்ளது. இந்நிலையில் மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என அடிக்கடி கூறுவதும், வரவுசெலவுத்திட்டத்தில் அத்தேர்தலுக்கு நிதி யொதுக்குவதும் மட்டும் போதாது.

அதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே முக்கியம். ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு வருடம் கடந்து

விட்டபோதும் இன்றுவரை அதற்கான முன்னெடுப்புகள் பேச்சளவில் மட்டுமே காணப்படுகின்றன. அதேவேளை

சமகாலத்தில் அத்தேர்தல் நடப்பதற்கான வாய்ப்புகளில்லை, புதிய அரசியலமைப்பு வரும்போது

அம்முறைமை முற்றாக நீக்கப்படும், இதுதொடர்பாக தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் ரில்வின் சில்வா தனது இந்தியப் பயணத்தின்போது அந்நாட்டு அரசாங்கத்துடன் உரையாடுவார் போன்ற செய்திகளும் வந்தவண்ணம் உள்ளன. இவ்வாறு காலந்தாழ்த்தும் ஒவ்வொரு கணமும் மாகாணசபை முறை தொடர்பாக, இந்த அரசாங்கத்தின் முதுகெலும்பான ஜே.வி.பியினரின் கடந்தகாலச் செயற்பாடுகளைத் தமிழ் மக்கள்

இணைத்துப் பார்த்து ஐயுறுவதைத் தவறாகக் கருதமுடியாது.இதேவேளை அரசாங்கம் வலிந்து முன்னெடுப்பதாகத் தென்படாவிட்டாலும் அதன்கீழ் இருக்கும் திணைக்களங்களின் செயற்பாடுகள் தொடர்வது தமிழ் மக்கள் மத்தியில் அரசாங்த்தின்மீதான நம்பிக்கையிலேயே பாதிப்பை ஏற்படுத்துகிறது. குறிப்பாக பௌத்தசாசன, தொல்பொருள்,

வனவிலங்கு திணைக்களங்களின் செயற்பாடுகள் முன்னரைப் போன்று தொடர்வதைக் காணமுடிகிறது. இது

தொடர்பாக அண்மையில் தமிழ் மக்களில் மனங்களில் அதிகளவு தாக்கதை ஏற்படுத்திய நிகழ்வாக

திருகோணமலை விவகாரம் அமைந்துவிட்டது. அவ்விவகாரம் தொடர்பான அரசின் அணுகுமுறை அறிவுபூர்வமானதாக அமைந்தாலும் அது தொடர்ந்து இவ்வாறான மோசமான செயற்பாடுகளுக்கு முகம்கொடுத்து வரும் தமிழ் மக்கள் முன்னைய ஆட்சியாளரைப் போல்தான் தற்போதையவர்களும் என்ற

நிலைப்பாட்டை எடுப்பதற்கு தள்ளியது என்பதும் யதார்த்தமானது.

இதேளை அரசாங்கத்தின் பக்கத்திலிருந்து பார்க்கும்போது வரவேற்கக் கூடிய பல விடயங்கள் இருப்பதை

மறுக்க முடியாது. தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளியான ஜே.வி.பியும் அதன் தலைவர்களான தற்போதைய ஜனாதிபதி, அமைச்சர்கள், செயலாளர் ரில்வின் சில்வா போன்றவர்களின் கடந்த கால தமிழ் விரோதச் செயற்பாடுகள் எப்படியானவை என்பதை நாடறியும். அவ்வாறிருந்தும் தேர்தல்

விஞ்ஞாபனத்திலோ அன்றி பரப்புரைகளிலோ அவர்கள் இனவாதக் கருத்துக்களை முன்வைக்கவில்லை.

அதுமட்டுமன்றி இன்றுவரை அவ்வாறான செயற்பாடுகளுக்கு அவர்கள் துணை நிற்கவும் இல்லை. கடந்த

ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தூண்டுதலால் தமிழ் மக்களின் அதிகளவு வாக்குகளைப் பெற்ற சஜித் பிரேமதாச திருகோணமலை விவகாரத்திலும் அதனைத் தொடர்ந்தும் இனவாதக் கருத்துகளைக் கக்கி வருகிறபோதும் அரசாங்கம் அவ்வாறான எந்தவித வெளிப்பாடுகளையும் காட்டாது, சிங்கள பௌத்த தீவிரவாதிகளது வெறுப்புகளுக்கு மத்தியிலும் இனவாதம், மதவாதத்துக்கு எதிரான கருத்துக்களையே அரசாங்கத்தின் தலைவர்கள் தெரிவித்து வருவது ஆரோக்கியமானதும் ஆறுதல் தரும் விடயங்களாகும்.

இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் வழமைக்கு மாறாக சுதந்திரமாகவும் அதிகளவு மக்களின் பங்கேற்புடன் சிறப்பாகவும் நடைபெற்றமைக்கு அரசாங்கத்தின் அணுகுமுறையே வழிவிட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. இது தொடர்பாக பெரிதாக நம்பிக்கை கொள்ளவும் முடியாது.

(தொடர்ச்சி 14 ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய பூங்காவைப் பாதுகாப்பது!



-நிலாந்தன்-

"நான் எழுதிய கட்டுரையை நானே மீண்டும் மேற்கோள் காட்ட வேண்டியிருக்கிறது அல்லது நினைவுபடுத்த வேண்டி இருக்கிறது" என்று மு. திருநாவுக்கரசு அடிக்கடி கூறுவார். தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் உள்ள மிக மூத்த, தொடர்ச்சியாக எழுதும் ஒரே அரசறிவியலாளர் அவர்தான்.

அவர் மட்டுமல்ல அவரைப் போன்று முன்பு போராட்டத்தில் ஈடுபட்ட பலரும் தமது சமூகத்திற்கான தமது பங்களிப்பை திரும்பத்திரும்ப தாங்களே நினைவூட்ட வேண்டியிருக்கிறது. அரசியல் கைதிகளுக்காக அரசியல் கைதிகள்தான் பெரும்பாலும் போராட வேண்டியிருக்கிறது. காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்காக அவர்களுடைய உறவினர்கள்தான் பெரும்பாலும் போராட வேண்டியிருக்கிறது.

மு.திருநாவுக்கரசு மட்டுமல்ல கடந்த பல தசாப்தங்களாக எழுதிவரும் பலரும் தாங்கள் எழுதியதை நினைவூட்ட வேண்டிய துர்பாக்கியமான ஒரு நிலையில் தான் இருக்கிறார்கள் என்பதனை நிரூபிக்கும் விதத்தில் கடந்த வாரம் ஒரு சம்பவம் நடந்தது. யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் ஓர் உள்ளக விளையாட்டு அரங்கைக் கட்டுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் எழுதிய அனேகர் பழைய பூங்காவின் பல்பரிமாண முக்கியத்துவம் தொடர்பாக இதுவரை வெளிவந்த கட்டுரைகள், உரைகள் தொடர்பாக அறிந்திருக்க வில்லை என்பதைத்தான் அவர்களுடைய கருத்துக்கள் காட்டின.

பழைய பூங்கா ஏற்கனவே சிதைக்கப் பட்டு விட்டது. அதைச் சிதைத்தவர் மஹிந்தவின் காலத்தில் ஆளுநராக இருந்த முன்னாள் படைத் தளபதியாகிய சந்திரசிறி. இதுதொடர்பாக விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி சபாபதி மண்டபத்தில் நடந்த ஒரு நிகழ்வில் நான் பேசியிருந்தேன். யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பா.அகிலனின் "காலத்தின் விளிம்பு" என்ற நூல் வெளியீட்டு விழா அது. மரபுரிமைச் சொத்துக்களை பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலான கட்டுரைகளின் தொகுப்பு அது. அபிவிருத்தியின் பெயரால் மரபுரிமைச் சொத்துக்கள் அழிக்கப்படுவது தொடர்பாக அகிலன் ஏற்கனவே பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

காலத்தின் விளிம்பு நூல் வெளியீட்டில் பழைய பூங்காவுக்குள்ள மரபுரிமை முக்கியத்துவம்,சுற்றுச்சூழல் முக்கியத்துவம், அரசியல், பண்பாடு முக்கியத்துவம் போன்றவற்றைத் தொகுத்து நான் பேசினேன். அது ஒரு பண்பாட்டு இன அழிப்பு என்றும் சுட்டிக்காட்டினேன்.

அதன் பின், சில மாதங்களுக்கு முன், யாழ்.பல்கலைக்கழகத்தில், நூலக கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்ட கட்டடப்படக் கலைஞர் மயூரநாதனின் "யாழ்ப்பாண வரலாறு" என்ற நூல் வெளியீட்டு விழாவின் போதும் நான் அதைச் சுட்டிக்காட்டிப் பேசினேன். அதன் பின், புதிய வட்டு வாகல் பாலம் தொடர்பாக, ஈழநாட்டில் எழுதிய கட்டுரையிலும் பழைய பூங்காவைப்பற்றிய குறிப்புக்கள் உண்டு.

நமது அரசியல்வாதிகள் எத்தனை பேர் இவற்றை வாசிக்கிறார்கள்? சமூக வலைத்தளங்களில் இதுபோன்ற விடயங்களை எழுதிக் கொண்டிருக்கும் எத்தனை பேர் அவற்றை வாசிக்கிறார்கள்? தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் விமர்சகர்கள் குறைவு. அதே சமயம் அதை வாசிப்பவர்களும் குறைவு. அரசியல் விமர்சனங்களை அந்த அரசியலை முன்னெடுக்கும் தரப்புகள் அல்லது அந்த அரசியலில் ஆர்வமுடைய தரப்புகள் வாசிக்க வில்லை என்றால் அரசியலில் அறிவும் செயலும் எப்படி இணைய முடியும்? அரசியல் செய்பவர்கள், அரசியலை விமர்சிப்பவர்களை ஒருவித ஒவ்வாமையோடு பார்க்கிறார்கள். அதனாலும் அவர்கள் எழுதுவதை வாசிக்காமல் விடுகிறார்கள்.

சரி. அதை வாசிக்க வேண்டாம். ஆங்கிலத்தில், சிங்களத்தில் வருபவற்றை யாவது வாசிக்கலாம்தானே? தமிழ்த் தேசிய அரசியலில் முன்னணியில் தெரியும் எத்தனை பேர் தொடர்ச்சியாக வாசிப்பவர்கள்?அவர்களில் பலருடைய உரைகளைப் பார்த்தால் அவர்கள் எதையும் வாசிப்பதாகத் தெரியவில்லையே? குறைந்தபட்சம் அரசியல் ஆழம்மிக்க காணொளிகளைக்கூட பார்ப்பதாகத் தெரியவில்லையே ?

இவ்வாறு தமிழ்த் தேசியப் பரப்பில் அறிவும் செயலும் பிரிந்திருக்கும் ஒரு துப்பாக்கியமான, தோல்விகரமான ஓர் அரசறிவியல்சூழல் காரணமாகத்தான் தமிழ் மக்கள் தமது இறுதி இலக்குகளை வெல்லமுடியாத மக்களாகத் தொடர்ந்தும் காணப்படுகிறார்களா ?

இக்கேள்வியோடு இக்கட்டுரையின் மையப் பகுதிக்கு வரலாம். பழைய பூங்கா. 1800ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜேம்ஸ் கோடினரின் குறிப்பின்படி,கேர்னல். பார்பெட் என்ற பிரிட்டிஷ் நிர்வாகியால் அமைக்கப்பட்ட, சுற்று மதிலோடு கூடிய ஒரு தோட்டம் பற்றிக் கூறப்படுகிறது. இந்தத் தோட்டத்தைத்தான் யாழ்ப்பாணத்தின் முதலாவது அரச அதிபராக இருந்த பி.ஏ.டைக் (1831 -1867 )விலைக்கு வாங்கி ஏற்கனவே காணப்பட்ட பூங்காவை விஸ்தரித்த தோடு,அரச அதிபருக்கான மாளிகையும் உட்பட சில கட்டடங்களைக் கட்டியதாக கட்டடப்படக் கலைஞர் மயூரநாதனின் நூலில் கூறப்பட்டுள்ளது.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அதாவது பிரிட்டிஷ்காரரின் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில், பழைய பூங்கா அதன் பராமரிப்பை இழந்து விட்டது என்பதை பிரிட்டிஷ் நிர்வாகிகளின் குறிப்புகளில் இருந்து அறியமுடிகிறது. அதிலிருந்து தொடங்கி அது யாழ்பாணத்தின் நகர்ப்புறக் காடாக வளரத் தொடங்கியது. ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் குறிப்பாக முதலாங் கட்ட ஈழப் போரின் தொடக்கத்தில் அது படையினரின் முகாமாக இருந்தது. யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தபின் அது அவர்களுடைய காவல்துறைத் தலைமையகமாக, பயிற்சி மையமாக இருந்தது. படையினரும் சரி விடுதலைப் புலிகள் இயக்கமும் சரி அங்கிருந்த முதுமரங்களை ஒரு கவசமாக, ஒரு குடையாக, ஒரு விதத்தில் மறைப்பாகப் பயன்படுத்தினார்கள் என்றுதான் கூறவேண்டும்.

ஆனால் நாலாங் கட்ட ஈழப்போரின் பின், சந்திரசிறீ ஆளுநராக இருந்த கால கட்டத்தில் பழைய பூங்கா சிதைக்கப் பட்டது. அரச திணைக்களங்களின் கட்டடங்கள் அங்கே கட்டியெழுப்பப் பட்டன. ஆளுநர் சந்திரசிறீ முது மரங்களை மட்டும் வெட்டவில்லை, அந்த மரங்களில் வாழ்ந்த வெளவால்கள் எச்சமிடுவதாகக் கூறி அவற்றைச் சுட்டதாக ஐங்கரன்நேசன் கூறினார். சந்திரசிறி பழைய பூங்காவைச் சிதைக்கும்போது தமிழ் மக்களின் விருப்பத்தைக் கேட்க வில்லை. அப்போது இருந்த தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அது தொடர்பாக வலிமையான எதிர்ப்பைக் காட்டியிருக்கவில்லை. ராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தின் வேரை அறுக்கும் பண்பாட்டுப் படுகொலை அது. சந்திரசிறீ பழைய பூங்காவின் ஆன்மாவை பெருமளவுக்கு சிதைத்து விட்டார். பின்னர் அதன் மூலையில் ஒரு சிறிய புதிய பூங்காவை உருவாக்கினார்.

"இப்பொழுது உயிரோடிருக்கும் எல்லா யாழ்ப்பாணத்தவர்களை விடவும் அவர்களுடைய முப்பாட்டன் முப்பாட்டிகளை விடவும் வயதால் மூத்த அந்த மரங்களை வெட்ட அனுமதிக்கலாமா? தனது வேர்களைப் பாதுகாக்க முடியாத ஒரு மக்கள் கூட்டம் ஒரு தேசிய இனமாக நிமிர முடியுமா?"



பழைய பூங்காவுக்குப் பல் பரிமாண முக்கியத்துவங்கள் உண்டு. முதலாவதாக அது ஒரு மரபுரிமைப் பிரதேசம். குடியேற்றவாத ஆட்சியாளர்களின் காலத்தில், அதாவது பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் யாழ்ப்பாணத்துக்கான நிர்வாகத் தலைமையகமாகவும் அதேசமயத்தில் ஒரு பூங்காவாகவும் அது பராமரிக்கப்பட்டுள்ளது. அதை உருவாக்கிய வடபகுதிக்கான முதலாவது அரச அதிபரான டைக் அதனை ஒரு பூங்காவாக மட்டும் கருதி உருவாக்க வில்லை என்பதனை அதுதொடர்பான குறிப்புகளில் இருந்து அறிய முடிகிறது. அதனை அவர் ஒரு பூங்கா என்பதற்கும் அப்பால் ஒரு பழத் தோட்டமாகவும் பராமரித்துள்ளார். அங்கிருந்த பழங்களை யாரும் இலவசமாகச் சாப்பிடலாம் என்றும் அனுமதித்திருக்கிறார்.

பிரிட்டிஷ்காரர்களின் ஆட்சி காலம் என்பது தமிழ் மக்களின் நவீன வரலாற்றில் ஒரு காலகட்டம். பழைய பூங்கா பிரிட்டிஷ்காரர்களின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தின் நிர்வாக மையமாகக் காணப்பட்டது. அங்குள்ள கட்டடங்கள், கட்டுமானங்கள் அனைத்தும் வரலாற்றின் ஒரு காலகட்ட நினைவுகளை தாங்கி நிற்கும் மரபுரிமை சின்னங்கள் ஆகும். அந்த அடிப்படையில் பழைய பூங்கா ஒரு மரபுரிமைப் பிரதேசம். அதைப் பாதுகாப்பது என்பது தமிழ் மக்களின் வரலாற்றின் ஒரு பகுதியை பாதுகாப்பது. அபிவிருத்தியின் பெயரால் அந்த மரபுரிமைச் சொத்துக்களைச் சிதைப்பது என்பது தமிழ் மக்களுடைய வரலாற்றின் ஒரு பகுதியை இல்லாமல் செய்வதுதான். அது மரபுரிமைப் பிரதேசங்கள் தொடர்பான உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டங்களுக்கு எதிரானது.

இரண்டாவது பரிமாணம், அது ஒரு நகர்ப்புற காடு. உலகின் வளர்ச்சி அடைந்த நாடுகள் நகரங்களின் சுவாசப் பைகளாக நகர மத்தியில் சிறு காடுகளை உருவாக்கிவரும் ஒரு காலகட்டத்தில், ஏற்கனவே யாழ்ப்பாணத்திலிருந்த, நூற்றாண்டு கால முதிய காடு ஒன்றின் தப்பி பிழைத்த சிறு பகுதியையாவது யார் பராமரிப்பது?


அந்த முதுமரங்களில் வசித்த லட்சக் கணக்கான வெளவால்களும் அந்தக் காட்டின் ஒரு பகுதிதான். மிக அரிதான முதுமரங்களும் அரிதானவை அந்த வெளவால்கள்தான். இது பழைய பூங்காவுக்குள்ள சூழலியல் முக்கியத் துவம். இதுதொடர்பாக ஐங்கரநேசன் ஏற்கனவே ஊடகச் சந்திப்பொன்றில் விரிவாகப் பேசியுள்ளார்.

மூன்றாவது தாவரவியல் பரிமாணம். அரிதாகிச் செல்லும் பாரம்பரிய முதுமரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பது உலகில் ஏற்றுக் கொள்ளப் பட்ட மரபுரிமை நடைமுறைகளில் ஒன்று. பழைய பூங்காவில் வானளாவ வளர்ந்து நிற்கும் முது மரங்கள் பல யாழ்ப்பாணத்தில் இப்பொழுது உயிருடன் இருக்கும் எல்லாரையும் விட, அவர்களுடைய முப்பாட்டன் முப்பாட்டிகளை விட மூத்தவை. நகரங்களைக் கட்டமைக்கும் போதும் வீதிகளை விசாலிக்கும்போதும் முதுமரங்களைப் பாதுகாப்பது என்பது உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுரிமை, தாவரவியல், சூழலில் நடைமுறைகளில் ஒன்று.

எனவே பழைய பூங்காவை அதன் முதுமரங்களோடும் வெளவால்களோடும் பாதுகாக்க வேண்டியது தமிழ் மக்களுடைய பொறுப்பு. போர்க் காலத்திலேயே பராமரிக்கப்பட்ட ஒரு மரபுரிமை பிரதேசத்தை அபிவிருத்தியின் பெயரால் சிதைப்பதற்கு அனுமதிக்கலாமா? இப்பொழுது உயிரோடிருக்கும் எல்லா யாழ்ப்பாணத்தவர்களை விடவும் அவர்களுடைய முப்பாட்டன் முப்பாட்டிகளை விடவும் வயதால் மூத்த அந்த மரங்களை வெட்ட அனுமதிக்கலாமா? தனது வேர் களைப் பாதுகாக்க முடியாத ஒரு மக்கள் கூட்டம் ஒரு தேசிய இனமாக நிமிர முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவா பிள்ளையல்ல... தமிழ்ப் பிள்ளை!



பொ.ஜெயச்சந்திரன்

கடந்த நவ.24ஆம் தேதி அனைத்து சமூக ஊடங்களிலும் பரவலாகப் பேசப்பட்டது மிகப் பெரிய ஆளுமையின் மறைவுச் செய்தி. கம்போடியாவில் நடைபெற்ற "கடாரம் கொண்டான் ராஜேந்திர சோழன்" மாநாட்டில் கலந்து கொள்வதற்குச் சென்றவர்தான் தமிழறிஞர் க.சிவகுருநாத பிள்ளை (சிவா பிள்ளை 83). இவர் இலங்கை யாழ்ப்பாணம் கட்டைப்பிராயை பிறப்பிடமாகக் கொண்டவர். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார்.

கடந்த ஜூன் மாதம் 15ஆம் தேதி "எம் மொழியும் உயிரும் வேறு இல்லை" என வருங்காலச் சந்ததியினருக்கு தமிழைக் கொண்டு சேர்க்க, ஆக்ஸ்ஃபோர்டு தமிழர் வரலாற்று வளாகத்தில், திருவள்ளுவரின் 183ஆவது சிலையை நிறுவ ஏற்பாடு செய்தவர்களில் முக்கிய நபர்களில் ஒருவர்.

கடந்த 1990களின் இறுதியில் இலங்கையின் வட கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் கணினி வசதிகளும், மின்சார வசதிகளும் குறைவாக இருந்த காலகட்டத்தில் மாணவர்கள், ஆசிரியர்களுடன் அவர் ஆழமான தொடர்பை ஏற்படுத்தி வழிகாட்டியாகவும், உந்து சக்தியாகவும் திகழ்ந்தார். தொலைதூர கிராமங்களுக்குச் சென்று கணினி விழிப்புணர்வு, தமிழ் தட்டச்சு, மென்பொருள் பயன்பாடு போன்றவற்றை மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் கொண்டு செல்வதற்கு முழுமையாக தன்னை அர்ப்பணித்துள்ளார்.

பல்வேறு தரப்பட்ட மக்கள் வாழ்கிற பிரிட்டன் போன்ற நாட்டில் கற்பித்தலில் பல மொழிகளைப் பயன்படுத்துவது என்பது சிரமமான பணி. ஆட்சி மொழி என்பது வேறு, கற்றல் மொழி என்பது வேறு. அந்நாட்டில் அதிகமானோர் ஆங்கில மொழிதான் பேசுகின்றனர். ஆனால், கற்றல் செயற்பாட்டில் ஆங்கில மொழி முதன்மையாக இருந்தாலும், மாணவர்கள் தாங்கள் விரும்பிய மொழிகளைக் கற்கலாம்.

அங்கே பிரெஞ்ச், டச்சு போன்ற ஐரோப்பிய மொழிகள் நீண்ட காலமாகக் கற்பிக்கப்பட்டு வந்தாலும் தமிழ் போன்ற ஆசிய மொழிகளைக் கற்கும் வாய்ப்பை பிரிட்டிஷ் அரசு 2000-ஆம் ஆண்டு காலகட்டத்தில் தேசிய தமிழ் பாடத்திட்டத்தை கோல்ட் ஸ்மித் பல்கலைக்கழகம் தலைமையின் கீழ் வெளியிட்டது. அதன் ஆக்கத்தில் ஒருவராக இருந்தவர்தான் சிவா பிள்ளை. கேம்பிரிட்ஜ் தேர்வுக் குழுவின் சபையால் மூன்று நிலையில் தேர்வுகள் நடத்தி அந்தச் சபை தமிழ் மொழிக்கு அங்கீகாரத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

பிரிட்டனில் ஏனைய ஐரோப்பிய மொழிகளுக்கு இருப்பதுபோல, தமிழ் மொழிக்கென ஒரு பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, 2006ஆம் ஆண்டிலிருந்து பிரிட்டன் அரசுப் பள்ளிகளிலும், வார முடிவு நாளில் பள்ளி முடிந்த பிறகு மாலை நேரத்தில் நடக்கும் தமிழ் பள்ளிகளிலும் கற்பிக்கப்பட்டது. அவற்றில், கற்பிக்கும் ஆசிரியர் பலர் தாய்நாட்டில் பயிற்சி பெற்ற ஆசிரியர், சிலர் தமிழ் கற்பிக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்ட சமூகத் தொண்டர்கள். ஆனாலும், அந்நாட்டுக்கு ஏற்றவாறு தமிழ் ஆசிரியர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தன.

இதனால், அந்நாட்டு மாணவர்களிடம் அணுகும் முறைகள் ஆசிரியர்களிடம் காணப்படுவது மிகவும் குறைவாகக் காணப்பட்டது. இதற்கென பல பயிற்சிப் பட்டறைகளை அந்நாட்டு பல்கலைக்கழக ஆர்வலர்கள் மூலமாக நடத்தப்பட்டாலும் அதில் கலந்து கொள்பவர்கள் எண்ணிக்கை குறைவுதான். இதைக் கவனத்தில் கொண்ட சிவா பிள்ளைதான் கணினித் துறையில் தொடக்க காலம் முதல் கவனம் செலுத்தியதால், தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்துக்கும் இந்தத் துறையைச் செயல்படுத்த வேண்டும் எனக் கருதி, முழுமையாகக் கற்றுக்கொண்டு அதன் வழியாகத் தமிழ் மொழியை கணினி மூலமாக புகுத்தி தமிழ்க் கல்வியை எளிமைப்படுத்தியவர்.

பிரிட்டன் உயர் கல்வி நிறுவனங்களில் பேராசிரியராகப் பணியாற்றும் போது, அவர் தமிழ் மொழியை ஒரு பாடமாக மட்டுமின்றி, ஒரு புனிதப் பாரம்பரியமாகவும், அறிவுக் களஞ்சியமாகவும் மாணவர்களிடம் கொண்டு வந்தவர். அவர் உருவாக்கிய கணினி, தமிழ் சார்ந்த மாணவர்கள் கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று பல்வேறு முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றுகின்றனர்.

லண்டன் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாகச் செயல்படும் எஸ்.ஓ.ஏ.எஸ். என்பது ஆசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் மொழி, கலாசாரம் மற்றும் சமூக அமைப்புகளை ஆராய்வதில் உலகப் புகழ் பெற்ற கல்வி நிறுவனம். இப்படி மதிப்புமிக்க கல்வி நிறுவனத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்த் துறை மீட்டுருவாக்கக் குழுவின் தொடக்ககால உறுப்பினராக இருந்து அந்த முயற்சியை இடைவிடாமல் முன்னெடுத்துச் சென்று செயலாற்றியவர்.


எவ்வளவு உயர்ந்த நிலையை அடைந்தாலும், அவர் மனதில் இருந்தது எளிமை. அவரின் வீட்டின் கதவு என்றும் திறந்ததாய் இருந்தது.

இலங்கையில் பிறந்து, பிரிட்டனிலும் வளர்ந்தாலும் அவருடைய சுற்றுப் பயணங்கள் பெரும்பாலும் தமிழகத்தை நோக்கியே இருக்கும். தமிழின் வளர்ச்சிக்காக எந்நேரமும் பணியாற்றியவர். இன்னும் சொல்லப் போனால் அவர் சிவா பிள்ளை அல்ல. உண்மையான தமிழ்ப் பிள்ளை என்றுகூட சொல்லலாம். அவர் விதைத்த விதைகள் இன்று வேரூன்றி விளைந்து கொண்டிருக்கின்றன. அவரது பெயர் மொழிக்கான அன்பின் அடையாளம் அவரது வாழ்வு அர்ப்பணிப்பின் பேராலயம் அவரது செயல்கள் தமிழின் வரலாற்றின் அழியாத பக்கங்கள்.

எளிமை, நேர்மை, ஒழுக்கம். மனித நேயம்- இவை அனைத்தும் அவரது வாழ்வின் அடையாளங்கள். கடைசியாக கடாரம் கொண்டான் ராசேந்திர சோழன் விழாவைப் பற்றி அவர் நேரலையாக விளக்கம் அளித்த காணொலி. தனது இறுதி மூச்சு வரை தமிழ் மொழிக்காக உழைத்த பெருமகன் என்ற பெருமையைப் அவருக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது.

(தினமணி)

# இந்திய நெருடா தமிழன்பன்!



- முனைவர் கோ.விசுவநாதன்

ஈரோடு தமிழன்பன் காலமானார் என்ற செய்தி தமிழ் உள்ளங்களில் இடியாய் இறங்கியுள்ளது...

நூற்றிருபது ஆண்டு வரலாறு கொண்ட மறுமலர்சித் தமிழ்க் கவிதையைத் தமது இடையறாத தொடர்ச்சியான கவிதைப் படைப்பால் மாணவப் பருவந்தொட்டுக் கடந்த எழுபது ஆண்டுகளாக வளப்படுத்திய முதல் கவிஞர் அவர்.

தமிழில் அதிக அளவில் கவிதைத் தொகுதிகளை 60-க்கும் மேற்பட்டதொகுதிகளையும், 6 பெருந் தொகுதிகளையும் வெளியிட்ட முதல் கவிஞர் அவர்.

2009இல் நிகழ்ந்த ஈழப்போரில் கொத்துக்கொத் தாய்த் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டபோது அந்த இனப் படுகொலையைக் கண்டித்துத் தமிழகத்தில் பலரும் எழுத முன்வராத நிலையில் நெஞ்சுரத்துடன் என் அருமை ஈழமே! (2009) என்னும் கவிதைத் தொகுதியைத் துணிச்சலாய் எழுதி வெளியிட்ட முதல் கவிஞர் அவர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தால் இரண்டு முறை தேசியக் கருத்தரங்கு நடத்தப்பட பொருண்மைக்களமாக விளங்கிய கவிதைகளைப் படைத்த முதல் கவிஞர் அவர்.

பாப்லோ நெருடா எழுதிய 'புக்ஸ் ஆஃப் குயின்' என்னும் வினாக்களாலான கவிதைத் தொகுதியை முன்மாதிரியாகக் கொண்டு 'கனாக் காணும் வினாக்கள்' (2004), 'இன்னும் சில வினாக்கள்' (2015) எனும் வினாக்களாலான கவிதைத் தொகுதிகள் இரண்டு இயற்றிய முதல் கவிஞர் அவர்.

பிறப்பால் ஆங்கிலேயராகவும், வாழிடத்தால் சீனராகவும் வாழும் முறையால் தமிழராகவும் ஹாங்காங்கில் வாழ்ந்துவரும் பேராசிரியர் கிரிகோரி ஜேம்ஸ் இவ்விரு நூல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 'போயம்ஸ் ஆஃப் கொஸ்டின்' என்னும் பெயரில் ஒரே நூலாக வெளியிட்டுள்ளார்.

இதே நூலுக்குப் பேராசிரியர் கிரிகோரி ஜேம்ஸூம், லொரைன் போக் என்னும் ஸ்பானியப் பெண்மணியும் இணைந்து 'போயம்ஸ் டி ப்ரிகுன்டாஸ்' என்னும் மகுடம் தாங்கிய ஸ்பானிய மொழிபெயர்ப்பு வெளிவந்துள்ளது. இக்காலத் தமிழ்க் கவிதை ஸ்பானிய மொழியில் முதன்முதலில் ஒரு மொழிபெயர்ப்புக்கான மூலநூல் தந்த முதல் கவிஞர் அவர்.

2017 நவம்பர் 8-இல் அமெரிக்காவில் டல்லஸ் நகரிலுள்ள மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கவிஞர் தி. அமிர்தகணேசன் முயற்சியால் ஈரோடு தமிழன்பனின் 1,000 கவிதைகளை வாசிக்கும் கவிதைத் திருவிழா நடைபெற்றது. அமெரிக்காவில் நடைபெற்ற முதல் கவிதைத் திருவிழா மட்டுமன்றி இப்படியொரு திருவிழா எடுக்கப்பட்ட முதல் கவிஞரும் ஈரோடு தமிழன்பனே ஆவார். 2019 செப்டம்பர் 28-இல் வட அமெரிக்க வானொ லியில் தமிழன்பன் பிறந்த நாள் வானலையில் அமெரிக் கத் தமிழர்கள் பலர் தமிழன்பன் கவிதை வாசிப்பு நிகழ்த் திக் கொண்டாடினர். இப்படியொரு பிறந்த நாள் திருவிழா எடுக்கப்பட்ட முதல் கவிஞரும் ஈரோடு தமிழன்பனே ஆவார்.

இவ்வாறு எண்ணற்ற முதல்களுக்கெல்லாம் முதல் எனும் முத்திரை கொண்ட முதன்மைச் சிறப்பு மிக்க ஒரே கவிஞர் ஈரோடு தமிழன்பன்.

பழைமையை புதுமைக்குள் சரியாகப் புகுத்தி விட்ட, மாயம் தெரிந்தவர்... பார்க்கும் பிழையைக்கூட கவிதையாக்கி சரி செய்துவிடும்.. சூத்திரதாரி.... கடவுளை பிறகு யோசிப்போம்... கவிதையை முதலில் யாசிப்போம்... என்று படிப்பவரை சுயம் தேட வைத்து விடும்... வல்லமைக்காரர்...

'இந்திய நெருடா தமிழன்பன்' என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.... இருந்தால்....படித்துப் பாருங்கள்... பின் சரணடைவீர்கள்...

திருவள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி, பாரதிதாசன், என்று தொடரும்- சுடரும் தனித்துவக் கவித்துவ உச்சங்களின் தொடர்ச்சியாக நம்மிடையே வாழ்ந்தவர் ஈரோடு தமிழன்பன்.

92 வயதிலும்.. எத்தனை ஆளுமை கொண்ட கர்ஜனை அது...தெளிவான உச்சரிப்புக்கு அவர் உதாரணம் என்று நான் கூற வேண்டியதே இல்லை... அதை தொலைக்காட்சிச் செய்திகள் சொல்லி விட்டன......
எப்போதோ நான் கண்ட பஞ்சாயத்து தொலைக்காட்சி பெட்டிகளில் செய்திகள் வரும் போது எழுந்து போய் விடும் கூட்டத்தில்... பட்டும் படாமல் பட்ட உருவம் அது என்று இந்நாளைய நினைவுத் தொடர்ச்சியில் நான் பொருத்திக் கொண்டேன்..

'தமிழன்பன் திராவிடச் சிந்தனையில் மலர்ந்து பொதுவுடைமைச் சித்தாந்தத்தில் தம்மை ஒப்படைத்து, உலகப் பார்வையில் உலகக் குடிமகனாக உலாவரும் கவிஞராக தம் இருப்பை நிலையாக அடையாளப் படுத்திக் கொண்டார்..'

தமிழின் மரபின் இரும்புக் கோட்டையிலிருந்து கவிதைக்கு விடுதலை அளித்து புதுக்கவிதை படைத்தவர் தமிழன்பன். ஹைக்கூ, சென்ரியூ, லிமரிக்கூ, வகையில்... கஜலையும் தமிழில்... இயற்றி... இலக்கியக் கொடையாக அளித்திருப்பவர்.

நெருடாவை அதே எரிமலையோடு தமிழுக்கு கொண்டு வந்தவர் தமிழன்பன்...நெருடா, காப்ரியேலின் மீது தீராத பற்று கொண்டவர் என்பது குறிப்பிடத் தக்கது... இருவருமே...தென் அமெரிக்க சித்தாந்தங்களை மாற்றி அமைத்தவர்கள்... நெருடாவின் கவிதைகளை 'சே'... தன் சட்டைப் பையில் எப்போதும் வைத்திருப்பார் என்பது... தோட்டாக்களை கவிதைகளாக்கவும் முடியும் என்பதற்கு சான்று...

அந்த மூவரின் நியாயமான கோபங்களும்... சமுதாயச் சிந்தனைகளும்... தமிழாய் மாறி விட்ட காலப் பெருமை தமிழன்பனையே சாரும்... பாரதிதாசனின் 'கொலைவாளினை எடடா... மிகக் கொடியோர் செயலறவே...'-யின் நீட்சி தமிழன்பன் என்றால் அது தான் நிஜம்... அந்த வாளின் சொட்டல்... தமிழன்பன் கவிதையாகி நிற்கிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியா போரா? யார் கையில்?
# ட்ரம்ப் 28 அம்சம் - உக்ரைன் 19 அம்சம்: அமைதி திட்டம் எது சாத்தியமாகும்?

- ஐங்கரன் விக்கினேஸ்வரா



ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதி திட்டங்களை ட்ரம்ப் நிர்வாகம் முன்வைத்தது. இதனை தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியமும் உக்ரைனும் இணைந்து ஒரு புதிய அமைதி ஒப்பந்தத்தை உருவாக்கி உள்ளன.

அதன்படி அமெரிக்கா, உக்ரைன் மற்றும் ஐரோப்பிய நேட்டோ நாடுகளின் உறுப்பினர்களிடையே இந்த அமைதி பேச்சுவார்த்தை முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ட்ரம்ப் அரசால் முன்மொழியப்பட்ட 28 அம்ச அமைதித் திட்டம் போரை நிறுத்துவதுடன், உக்ரைன் அமெரிக்காவிடமிருந்து பாதுகாப்பு உத்தரவாதங்களைப் பெறும். மேலும் உக்ரைன் அல்லது அதன் அண்டை நாடுகளுக்கு எதிராக இனி ரஷ்யா எந்த ஆக்கிரமிப்பையும் எடுக்காது. மேலும் ஐரோப்பாவை நோக்கி ஆக்கிரமிப்பு இல்லாத கொள்கையை மாஸ்கோ அதன் அரசியல் சட்டத்தில் இணைக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் இரு தரப்பிலிருந்தும் பொதுமக்கள் மற்றும் போர்க் கைதிகள் பரிமாறிக் கொள்ளப்படுவார்கள். போரிடும் இரு தரப்புக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும். அத்துடன் கருங்கடல் வழியாக தானியங்களை கொண்டு செல்ல டினிப்ரோ நதியைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் முயற்சிகளை மாஸ்கோ நிறுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் சர்ச்சைக்குரிய பிராந்தியங்களான ரஷ்யாவால் இணைக்கப்பட்ட கிரிமியா, லுஹான்ஸ்க் மற்றும் டொனெட்ஸ்க் பகுதிகள், வளமான டான்பாஸை உருவாக்கும் கெர்சன் மற்றும் சபோரிஷியா உள்ளிட்ட கிழக்கு உக்ரைனின் சில பகுதிகளை ரஷ்யாவிடம் ஒப்படைக்க இந்த அமைதி திட்டம் முன்மொழிந்தது.

இந்த திட்டம் மூலம் உக்ரைனை 600,000 க்கும் உட்பட்ட இராணுவ வீரர்களுக்கு மட்டுப்படுத்தியது. மேலும் கீவ் அரசு அதன் அரசியலமைப்பில் நேட்டோவில் சேராது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கோரியது.

**உக்ரைனின் 19 அம்ச திட்டம்:**

ஜெனீவாவில் அமெரிக்க மற்றும் உக்ரைன் அதிகாரிகளுக்கு இடையேயான இரண்டு நாட்கள் பேச்சுவார்த்தை களைத் தொடர்ந்து, ஒரு புதிய 19 அம்ச அமைதித் திட்டம் உருவானது. பேச்சுவார்த்தையில் உக்ரைனின் தரப்பில் ஜெலென்ஸ்கியின் தலைமைத் தளபதி ஆண்ட்ரி யெர்மக் மற்றும் தூதர் உமெரோவ் ஆகியோரால் வழிநடத்தப்பட்டன. அதே நேரத்தில் அமெரிக்க அதிகாரிகளில் வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ, டிரிஸ்கோல், குஷ்னர் மற்றும் விட்காஃப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உக்ரைனின் இராணுவத்திற்கான 600,000 உறுப்பினர் வரம்பை நீக்க அமெரிக்கா தயாராக இருப்பதாக கூறியது. இருப்பினும் ரஷ்யா கைப்பற்றிய பிரதேசத்தை விட்டுக் கொடுப்பது தொடர்பான சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் இன்னும் முடிவுக்கு வரவில்லை. கனிம வளம் மிக்க டொனெட்ஸ்க், கெர்சன், லுஹான்ஸ்க் மற்றும் சபோரிஷியா மாகாணங்களை ரஷ்யாவுடன் இணைப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

என்னவாயினும் புட்டின் போரின் மூலம் அதிகபட்ச இலக்குகளை நோக்கி அடைந்து வருகிறார். அத்துடன் 2022 முதல் தனது கோரிக்கைகளில் உறுதியாக உள்ளார். கைப்பற்றிய ஐந்து பிரதேசங்களையும் முழுமையாக உரிமை கோரியும் உள்ளார்.

இதேவேளை உக்ரைனுக்கு நேட்டோ உறுப்பினர் பதவி வழங்குவதை மாஸ்கோ கடுமையாக எதிர்த்து வருகிறது. உக்ரைனின் இராணுவ உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க ரஷ்யா ஒப்புக் கொள்ளுமா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. 2022 ஆம் ஆண்டில் உக்ரைனில் 100,000 க்கும் உற்பட்ட துருப்புக்களே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் போரில் பாதிக்கப்பட்டவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யப்படும். போர்க் குற்றங்களுக்கான முழுமையான மன்னிப்புக்கான திட்டங்கள் மீண்டும் செயல்படுத்தப்படும் என்றும் இந்த வரைவில் கூறப்பட்டுள்ளது.

உக்ரைனில் நிலைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோக பூர்வமற்ற நேட்டோ நாடுகளின் துருப்புக்கள் பற்றியும், முந்தைய அமைதி ஒப்பந்தத்தின் கட்டுப்பாடுகளிலும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் ரஷ்யா கூறியுள் ளது. நேட்டோ துருப்புக்கள் உக்ரைன் களத்தில் போராடுகின்றன என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

**உக்ரைன் போர் முடிவுறுமா ?**

அமெரிக்காவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான

> “ கிரெம்ளின் சார்பு நிலைப்பாட்டை அமெரிக்கா எடுத்துக் கொள்கிறது என்று கூறப்பட்டாலும், இந்த அமைதி திட்டம் விவாதிக்கப்பட வேண்டும் என்று ரஷ்ய அரசு கருதுகிறது. ஐரோப்பாவை தாக்க மாட்டோம் என்று ரஷ்யா உறுதி மொழியை வழங்கத் தயாராக உள்ளது என்றும் கூறியுள்ளது. மேலும் 2022 ஆம் ஆண்டில் உக்ரைன் படையில் 100,000 வீரரே இருந்தனர். ஆனால் புதிய அமெரிக்க அமைதி திட்டத்தின்படி 600,000 துருப்புக்களை வைத்திருக்க முடியும் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.



புதிய அமைதி ஒப்பந்தம் குறித்து காரசாரமாக ரஷ்யாவால் விவாதிக்கப்படுகிறது. இதனால் எதிர்கால அமைதி ஒப்பந்தத்திற்கான கட்டமைப்பை உருவாக்க முடியாது என்று விளாடிமிர் புட்டின் கூறியுள்ளார்.

ஆனால் ஒரு அமைதி உடன்பாட்டை எட்ட முடியாவிட்டால், தொடர்ந்து சண்டையிடவும், உக்ரைன் பிராந்தியங்களை கைப்பற்ற மாஸ்கோ தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி கூறியுள்ளார்.

கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகால மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தத்தின் அடிப்படையாக அமெரிக்க - உக்ரைன் அமைதித் திட்டம் ஒரு வரைவு மாறவேண்டும் என்று விளாடிமிர் புட்டின் கூறுகிறார். உக்ரைன் போரை முடிவுக் குக் கொண்டுவருவதற்கான அமெரிக்கத் திட்டம் அடிப்படையாக இருக்க வேண்டும்என அவர்வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கா அரசு கிரெம்ளினின் நிலைப்பாட்டையே கூடியளவு கணக்கில் எடுத்துக்கொள்கிறது என உக்ரைனிய அதிபர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகால போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் வேகமெடுக்கும் நிலையில், அமெரிக்க தூதர் ஸ்டீவ் விட்காஃப் அடுத்த வாரம் மாஸ்கோவிற்கு வருகை தர உள்ளதாக கிரெம்ளினின் மூத்த அதிகாரி உறுதிப்படுத் தியுள்ளனர்.

**உக்ரைன் படை வெளியேற்றம்:**

உக்ரைன் துருப்புக்கள் தாங்கள் நிலை கொண்டிருக்கும் பிரதேசங்களிலிருந்து வெளியேறினால் சண்டை நின்றுவிடும். அவர்கள் வெளியேறவில்லை என்றால், ஆயுதம் வழிமுறைகள் மூலம் இதை அடைவோம் என்று புட்டின் எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும் ரஷ்யப் படைகள் உக்ரைனில் வேகமாக முன்னேறி வருவதாகவும் கூறியுள்ளார்.

உக்ரைன் தலைமை சட்டவிரோதமானது என்று தான் கருதுவதாகவும், எனவே உக்ரைனுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது சட்டப்பூர்வமாக சாத்தியமற்றது என்றும் புட்டின் தெரிவித்துள்ளார். எந்தவொரு ஒப்பந்தமும் சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்படுவதை உறுதி செய்வது முக்கியம் என்றும், பல சர்வதேச நாடுகள் உக்ரைனில் ரஷ்யாவின் நிலைப்பாட்டை அங்கீகரித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அமெரிக்க தூதர் ஸ்டீவ் விட்காஃப் உக்ரைன் மீதான அமைதிப் பேச்சுவார்த்தைகளில் மாஸ்கோவை நோக்கிச் சார்புடையவராகக் காட்டினார் என்ற கருத்தையும் புட்டின் நிராகரித்தார்.

**அமைதித் திட்டத்தில் உக்ரைன்:**

போர் தீவிரமாக இருக்கையிலும் அமைதி முயற்சி தொடர்கின்றன என்று கீவ் அரசு கூறுகிறது. உக்ரைன் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து அமெரிக்க ஆதரவுடன் கூடிய அமைதித் திட்டத்தில் தொடர்ந்து பணியாற்ற உள்ளனர் என ஜெலென்ஸ்கியின் தலைமைத் தளபதி தெரிவித்தார்.

ஆனாலும் தற்போது டொனெட்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள மூலோபாய நகரமான போக்ரோவ்ஸ்க் மீது உக்ரைனும் ரஷ்யாவும் கடுமையான சண்டையில் ஈடுபட்டுள்ளன. ரஷ்யா தனது நடவடிக்கைகளுக்காக அங்கு ரிசர்வ் படைகளை அனுப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு உள்ளது. ரஷ்யப் படைகள் இப்போது அயல் நகரமான மிர்னோஹ்ராட்டையும் முழுமையாகச் சுற்றி வளைத்துவிட்டன. போக்ரோவ்ஸ்க்கின் 70 சதவீதப் பகுதியை ரஷ்யா கட்டுப்படுத்துகிறது.

**30 ஐரோப்பிய நாடுகள் ஆதரவு:**

உக்ரைனை ஆதரிக்கும் முப்பது ஐரோப்பிய நாடுகளின், புதிய அமைதி ஒப்புதலோடு முன்னோக்கிச் செல்ல கீவ் தயாராக உள்ளது. ஆயினும் வாஷிங்டன் இப்போது ஐரோப்பாவை மட்டுமன்றி, மாஸ்கோவையும் திருப்திப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அலாஸ்காவில் ட்ரம்ப் மற்றும் புட்டினுக்கு இடையேயான பேச்சுவார்த்தையின் உணர்வையும் எழுத்தையும் அமைதி வரைவு பிரதிபலிக்க வேண்டும் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை ட்ரம்ப் உக்ரைனில் அமைதி நிறைவேறுவதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும், இந்த அமைதித் திட்டத்தை இறுதி செய்யும் நம்பிக்கையில், சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் மாஸ்கோவில் ஜனாதிபதி புட்டினைச் சந்திக்க உத்தரவிட்டுள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் இராணுவச் செயலாளர் டான் டிரிஸ்கோல் உக்ரேனிய அதிபரை சந்திப்பார் என்றும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

இறுதிக் கட்டமாக ஜெலென்ஸ்கி, புட்டினை விரைவில் சந்திப்பேன். ஆனால் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தம் இறுதியானதாகவோ அல்லது இறுதிக் கட்டத்தில் இருக்கும் போதோ அது சாத்தியம் என்று நினைக்கிறேன். முடிந்தவரை விரைவில் அமைதியை அடைய முடியும் என்று அனைவரும் நம்புவோம் என்று அவர் கூறியுள்ளார்.

சமாதான ஒப்பந்தத்திற்குப் பிறகு, உக்ரைனுக்கு வலுவான ஆயுதப் படையும், பாதுகாப்பு உத்தரவாதங்கள் தேவைப்படும். மேலும் அந்நாட்டின் மீது எந்த ஆயுத நடவடிக்கையை திணிக்கக்கூடாது என்று ஜெர்மன் சான்சலர் பிரீட்ரிக் மெர்ஸ் கூறியுள்ளார். நீண்ட காலமாக ஒரு தீர்வைக் காண அமெரிக்க அரசாங்கத்தின் முயற்சிகளை நாங்கள் மிகவும் நேர்மறையாகக் தற்போது கருதுகிறோம் என்று திரு மெர்ஸ் கூறியுள்ளார்.

இருப்பினும், ஐரோப்பியர்களின் பாதுகாப்பு நலன்களும் உக்ரைனின் பாதுகாப்பு நலன்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி ....)

## அரசாங்கத்துக்கும் சிவில்

விரைவாக எந்த நேரத்திலும் நடத்தப்படுமா என்ற ஒரு கேள்வி இருக்கிறது.

மாகாணங்களல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்வது தொடர்பில் சகல கட்சிகளினதும் இணக்கப்பாட்டை

பெறமுடியவில்லை என்று காரணத்தின் அடிப்படையில் முன்னைய அரசாங்கங்களைப் போன்று மாகாணசபை தேர்தல்களை தொடர்ச்சியாகப் பின் போடும் தந்திரோபாயத்தை இந்த அரசாங்கமும் கடைப்பிடிக்கக்கூடும் என்ற ஒரு விசனம் இருக்கிறது.

மக்கள் பாதிக்கப்பட்டாலும் அதைப் பற்றி பொருட்படுத்தாமல் தங்களது நலன்களையே கருத்திற்கொண்டு செயற்பட்ட முன்னைய அரசாங்கங்களின் நடைமுறையில் இருந்து வேறுபட்டதாக தேசிய மக்கள் சக்தி

அரசாங்கம் செயற்பட வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். சனத் தொகையில் ஓரங்கட்டப்பட்ட

இரு பிரிவினரை ஆட்சிமுறைக்குள் கொண்டுவரக்கூடிய ஒரு பொறிமுறையாக மாகாண சபைகள்விளங்குகின்றன.

வடக்கு, கிழக்கிலும் மலையகத்திலும் உள்ள இனத்துவ சிறுபான்மைச் சமூகங்கள் முதலாவது பிரிவினர்.

அவர்கள் பெரும்பான்மையினராக அல்லது கணிசமான எண்ணிக்கையில் வாழும் மாகாணங்களில் தீர்மானங்களை மேற்கொள்பவர்களாக அவர்கள் வாய்ப்புக்களை பெறமுடியும். இரண்டாவது பிரிவினர்

பெண்கள். 25 சதவீத கோட்டாவின் மூலம் அவர்கள் பயன் பெற முடியும். இந்த இரு குழுக்களுக்கும் அதிகாரமளித்து அவர்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெறுவது முழுச் சமூகத்துக்கும்

அதிகாரமளிப்பதற்கு பங்களிப்புச் செய்யும் என்பது மாத்திரமல்ல, சர்வதேச சமூகத்தின் நம்பகத்தன்மையை இலங்கை சம்பாதித்துக் கொள்ளவும் உதவும். ●

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி ....)

## அனுர அரசாங்கத்தின்

புதிதாக வருபவர்களாலும் முடியும். ஆனால் இராணுவத்தினால் கையகப்படுத்தியுள்ள துயிலுமில்லங்கள்

அனைத்தையும் விடுவித்து நிரந்தரமாக அங்கு மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்தவும் புனிதமானபகுதியாகப் பேணவும் வழிசெய்தால் தமிழ் மக்களின் தற்காலிக நம்பிக்கை நிரந்தமாகவாய்ப்பேற்படும். அது மட்டுமன்றி மாவீரர் மீதான தமிழ்த் தேசிய உணர்வானது மதம், சாதி, அரசியல், தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு எல்லாம் கடந்த ஒன்றென்பதையும் அது எந்த அடக்குமுறைகளாலும் அழிக்கப்பட முடியாதது என்பதையும் அரசாங்கம் தெளிவாகவே விளங்கிருக்கும். எனவே அமைச்சர் சந்திரசேகரன் கூறுவது உண்மையெனில் துயிலுமில்லங்களிலிருந்து இராணுவம் அகற்றப்பட்டு

அடுத்தாண்டு மாவீரர் நாள் நிகழ்வுகள் நிலையான துயலுமில்லங்களில் நடைபெறுவதற்கு அரசாங்கம்

இடம்கொடுக்கவேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்து கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாகப் பௌத்த சிங்கள பேரினவாத்துக்குள்சிறைப்பட்டு முகங்கொடுத்து வாழ்ந்து வருபவர்கள். அனுர அரசாங்கத்தினரைப் பொறுத்து அகற்ற

விரும்பினாலும் அசைக்க முடியாத வகையிலான பௌத்த சிங்கள கட்டுமானத்துக்கு முகம் கொடுக்க வேண்டிய

நிலையிலுள்ளவர்கள். அதுமட்டுமல்ல கடந்தகாலத்தில் தொடர்ந்து ஏமாற்றப்பட்ட தமிழ் மக்களின் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை என்பது அதன் பேச்சுகளில் இல்லாது செயற்பாடுகளில் இருக்கவேண்டும் என அவர்கள் எதிர்பார்ப்பதில் நியாயமுண்டு. அதன்காரணமாக அரசாங்கத்தின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையில் தளர்வு ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. அதனால் தமிழ் மக்களின்

நம்பிக்கையைத் தக்க வைப்பதற்கு அனுர தரப்பினர் தாங்கள் முன்னைய ஜே.வி.பியிலிருந்து வேறானவர்கள் என்பதை நிரூபிக்க இன்னும் கடின முயற்சி எடுக்கவேண்டியுள்ளது. ●

## கண்டியில் அதிகபட்ச மழை வீழ்ச்சி

கொழும்பு, நவ. 30

நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் நாட்டின் அதிகபட்ச மழை வீழ்ச்சி கண்டி மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

கண்டி, நில்லம்பே பகுதியில் நேற்று முன்தினம் 431 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கேகாலை மாவட்டத்தில் உள்ள டொத்தெலு ஓயா தோட்டத்தில் 277.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொக்கணை பகுதியில் 274 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (எ)

## கொட்டடி, பண்ணை பகுதிகளில் கடல் நீர் உட்புகும் அபாய நிலை!

யாழ்ப்பாணம், நவ. 30

கடந்த சில நாட்களாக காற்றுடன் தொடரும் மழை காரணமாக யாழ்ப்பாணம் - கொட்டடி, பண்ணைப் பகுதிகளில் கடல் நீர் உட்புகும் அபாயம் காணப்படுவதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

குறித்த பகுதிகளில் காற்றின் வேகம் அதிகமாக இருப்பதனால் கடல் பகுதி கொந்தளிப்புடன் இருப்பதுடன், கடல் நீர் உட்புகும் அபாயம் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

(அ)

(06 ஆம் பக்க தொடர்ச்சி............)

## 'இல்லை' என்பது தவறல்ல!

என உறவுகளுக்குள் வாக்குறுதி கொடுத் துவிட்டு, பிறகு அதிலிருந்து பின்வாங்கி விடுவதால்தான் மனிதர்களிடையே அது மனமுறிவாகி விடுகிறது. இது நாள டைவில் தீராத வன்மமாக உருவெடுத்து வெடிக்கிறது.

மகாபாரதத்தில் பாண்டவர்களை கௌரவர்கள் சூதாட அழைத்தபோது ஒரே மனதுடன், 'இல்லை நாங்கள்

ஆடப்போவதில்லை, சூதாட்டம் வேண்டாம்' எனச் சொல்லியிருந்தால் இத்தனை பெரிய போர் தவிர்க்கப்பட்டிருக்கும்தானே?! இராமாயணத்தில் மாய மானை தேடிப்போன இராமனைக் காணாது போகவே இலட்சுமணனை அங்கு செல்லுமாறு சீதை பணிக்கிறார். அன்று, இல்லை ராமன் சொன்ன வார்த் தையை நான் தட்டமாட்டேன் என லட்சுமணன் சொல்லி இருந்தால் காப்பியத்தின் போக்கு வேறு மாதிரி ஆகியிருக்கும் அல்லவா?

பிறரை திருப்திப்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தில் பலமுறை நாம் வலிகளைச் சுமக்க வேண்டியதாய் இருக்கிறது. சரி, இனி எதற்கெடுத்தாலும் ,ல்லை எனச் சொல்லிப் பழகு வோம் என்பதல்ல முன் வைக்கும் செய்தி. அசாதாரண சூழ்நிலைகளில், நம்மை மிகப் பெரிய அச்சுறுத்தலுக்கும் அயர்ச்சிக்கும் உள்ளாக்கும் தருணங்களில், நம்மைப் பலவீனமாக்கும் தன்மைகளில் 'இல்லை' என நம் முடிவை துணிச்சலாகமுன் வைப்பது சிறந்தது.

அதிலும் குடும்பம் என்று வந்துவிட் டால், பெண் என்பவள்தான் எப்போதும் விட்டுக் கொடுத்துப் போகவேண்டும் என தொட்டதுக்கெல்லாம் பெண்களை கூறு போடும் சமூகத்தில் பெண்களின் நிலை பரிதாபமாக உள்ளது.

உண்மை நிகழ்வென வாசித்த செய்தி ஒன்றை ,தற்கு உதாரணமாகச் சொல்லலாம். இத்தாலியைச் சேர்ந்த

பிராங்கா வியூலா எனும் பெண்ணுக்கு பிலிப்போ மெலோடியா எனும் ஆணுடன் நிச்சயம் நடந்தது. ஒருகட்டத்தில் மணமகன் தேசவிரோத அமைப்புகளோடு தொடர்புடையவன் என்பதறிந்து பிராங்காவின்பெற்றோர் திருமணத்தை நிறுத்தினர். இதனால், வெகுண்டெழுந்த பிலிப்போ 'பிராங்காவை' கடத்தி ஐந்து நாள்களுக்கு மேலாக அடைத்து வைத்து பாலியல் வன்கொடுமை செய்தான். பின்னர், அவளைப் போராடி மீட்டனர்.

இந்தச் சம்பவம் 70 ஆண்டுகளுக்கு முன்பு இத்தாலியில் நடைபெற்றது. தன் மகளின் வாழ்க்கை கேள்விக்குறியாகக் கூடாது என்பதற்காக பெண்ணை பெற்றோரும், தங்கள் மகன் தண்டனை பெறக் கூடாது என்பதற்காக அந்த ஆணை பெற்றோரும் ,ணைந்து பேசி மீண்டும் அவர்களின் திருமணத்துக்கு ஏற்பாடு

செய்தார்கள். அந்தக் காலத்தில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான இத்தாலிய பெண்கள் தங்கள் குடும்ப கௌரவத்துக்கும் சமூகப் புறக்கணிப்புக்கும் அஞ்சி தங்களைக் கொடுமைக்கு உள்ளாக்கியவனையே மணந்து கொள்ளும் வழக்கம் இருந்தது.

ஆனால், பிராங்கா 'நான் அவனை மணக்க மாட்டேன்' என்று உறுதியுடன் நின்றார். இத்தாலியசெய்தித்தாள்களில் எல்லாம் ,து தலைப்புச் செய்தியானது. பதின்ம வயதைக் கடவாத பிராங்காவின் துணிவும் மனஉறுதியும் மெலோடியாவை சிறையில் தள்ளியது. அதுவரை பாலியல் வன்கொடுமை செய்தவனுக்கே வாழ்க்கைப்பட வேண்டும் என்ற இத்தாலிய சமூக விதி பிராங்காவின் 'இல்லை' என்ற ஒற்றை வார்த்தையால் உடைத்தெறியப் பட்டது. அதுவே சமூக மாற்றத்துக்கான திறவுகோலாகவும் அமைந்தது. 'மறுவாழ்வு திருமணம்'என்ற அர்த்தமற்ற சட்டத்தை 1981-,ல் ஒழித்தது இத்தாலி. ',ல்லை' என்பது ஒற்றைச் சொல் மட்டுமல்ல,

சமயத்தில் அது ஒரு முழுமையான வாக்கியம் என்பதை இதன்மூலம் தெளிவாக உணர முடிகிறது !

# கண்டி, பதுளையில் 85 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 30

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் மாத்திரம் இதுவரை பதிவான உயிரிழப்புகளின் எண்ணிக்கை 85 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன், மோசமான வானிலை காரணமாகப் பல பகுதிகளில் நேற்று முன் தினமும் மண்சரிவுகள் பதிவாகியுள்ளன.

கண்டி ஹசலக பமுனுபுர பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவில் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 12 பேர் காணாமல்போயுள்ளனர்.

அத்துடன், பதுளை மாவட்டத்தைப் பாதித்த அனர்த்த நிலைமை காரணமாக 35 பேர் உயிரிழந்துள்ளதாக மாவட்டச் செயலாளர் பிரபாத் அபேவர்தன தெரிவித்தார்.

மண்சரிவுகள் காரணமாக 27 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, கேகாலை புலத்கொபிட்டிய தேதுகல பிரதேசத்தில் 5 வீடுகள் மண்சரிவில் சிக்கியுள்ளன.

அந்த வீடுகளில் இருந்த சுமார் 12 பேர் காணாமல் போயுள்ளதாகவும், அந்த இடத்தைச் சென்றடைவது கடினமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

## அரநாயக்க அம்பலாங்கந்தையில் மண்சரிவில் சிக்கி 120 பேர் மாயம்!

கொழும்பு, நவ. 30

அரநாயக்க அம்பலாங்கந்தை பகுதியில் ஏற்பட்ட மண்சரி வில் சிக்கி 120 பேரை காணா மல்போயுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

அவர்களில் 20 குழந்தைகளும் அடங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மண் சரிவு காரணமாக சிக்கியுள்ளவர்களை மீட்பதில் சிரமம் காணப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. (அ)

## தேசிய பூங்காக்கள் பூட்டு!

கொழும்பு, நவ. 30

கடும் மழை மற்றும் வெள்ள அபாயம் காரணமாக சில தேசிய பூங்காக்களைப் பார்வையாளர்களுக்காகத் தற்காலிகமாக மூடியுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வில்பத்து தேசிய பூங்கா, யால தேசிய பூங்காவின் வலயங்கள் 01, 02, 03, 04, 05 மற்றும் சோமாவதிய தேசிய பூங்கா ஆகியவை மூடப்பட்டுள்ளன.

இங்கு செல்வதற்காக அனுமதி பெற்றிருந்த பார்வையாளர்கள் மேலதிக தகவல்களுக்காக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர். (அ)

## சுற்றுலா பயணிகள் பிரச்சனை அறிவிக்க தொலைபேசி இலக்கம்

கொழும்பு, நவ. 30

நிலவும் பாதகமான வானிலை காரணமாக சுற்றுலாப் பயணிகள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து தெரிவிக்க வெளியுறவு,

வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, அவசர பிரிவு தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் எதிர்கொள்ளும் அவசரநிலைகள் தொடர்பாக நிவாரண சேவைகளை ஒருங்கிணைக்க இந்த எண் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை , சுற்றுலா தொடர்பான விசாரணைகளுக்காக 1912 என்ற உதவி எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் நோயாளர் காவு வண்டி மற்றும் மருத்துவ அவசர எண்ணான 1990 என்ற இலக்கத்தையும் பயன்படுத்தலாம்.

அத்தோடு,

1912 என்ற எண்ணை அழைப்பதன் மூலம், சுற்றுலா தகவல், பொது வழி காட்டுதல் மற்றும் சுற்றுலா காவல்துறையைத் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் கொழும்பு சுற்றுலா பொலிஸ் தலைமையகத்தை தொடர்பு கொள்ள 94 11 242 1052 என்ற தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரற்ற...

ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில், 432 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 412 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

8 வீடுகள் பகுதிகளில் சேதமடைந்துள்ளதுடன், 4 இடங்களில், 60 குடும்பங்களை சேர்ந்த 186 தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சங்கானைப் பிரதேச செயலக பிரிவில், ஆயிரத்து 664 குடும்பங்களை சேர்ந்த 5 ஆயிரத்து 521 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 11 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. 3 பாதுகாப்பு மையங்களில், 27 குடும்பங்களை சேர்ந்த 92 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஊர்க்காவற்துறை பிரதேச செயலக பிரிவில், 229 குடும்பங்களைச் சேர்ந்த 760 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவில், 222 குடும்பங்களைச் சேர்ந்த 699 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வீடு ஒன்றும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளது. ஒரு பாதுகாப்பு மையத்தில், 47 குடும்பங்களை சேர்ந்த 166 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வேலணைப் பிரதேச செயலக பிரிவில், 328 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 35 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 12 வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன. மூன்று பாதுகாப்பு மையங்களில், 162 குடும்பங்களைச் சேர்ந்த 420 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில், 335 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 85 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 13 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. ஆறு பாதுகாப்பு மையங்களில், 66 குடும்பங்களை சேர்ந்த 393 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலக பிரிவில், 251 குடும்பங்களைச் சேர்ந்த 802 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு வீடுகள் முழுமையாகவும் 14 வீடுகள் பகுதி அளவிலும் சேதம் அடைந்துள்ளன. பாதுகாப்பு மையம் ஒன்றில், 48 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

காரைநகர் பிரதேச செயலக பிரிவில், 60 குடும்பங்களை சேர்ந்த 212 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 6 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. பாதுகாப்பு மையம் ஒன்றில், 6 குடும்பங்களை சேர்ந்த 18 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில், 508 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 621 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 57 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில், 57 குடும்பங்களை சேர்ந்த 185 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலக பிரிவில், 601 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 42 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவில், ஆயிரத்து 183 குடும்பங்களை சேர்ந்த, 3 ஆயிரத்து 526 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் காயம் அடைந்துள்ளார். ஒரு வீடு முழுமையாகவும், ஒன்பது வீடுகள் பகுதி அளவிலும் சேதம் அடைந்துள்ளன. ஐந்து அடிப்படைக் கட்டமைப்புகள் முழுமையாகவும், இரண்டு அடிப்படைக் கட்டமைப்புகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன.

இரண்டு பாதுகாப்பு மையங்களில், 62 குடும்பங்களைச் சேர்ந்த 217 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் பிரதேச செயலக பிரிவில், 58 குடும்பங்களை சேர்ந்த 192 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் காயமடைந்துள்ளார். ஒன்பது வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளதுடன், ஒரு அடிப்படைக் கட்டமைப்பும் சேதமடைந்துள்ளது. ஒரு பாதுகாப்பு மையத்தில், 8 குடும்பங்களை சேர்ந்த 29 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி பிரதேச செயலக பிரிவில், ஏழு குடும்பங்களை சேர்ந்த 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

நல்லூர் பிரதேச செயலக பிரிவில், 353 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 104 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இரண்டு பாதுகாப்பு மையங்களில், 95 குடும்பங்களை சேர்ந்த 255 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்- என்றார். (அ)

## இயற்கை...

அந்த நிலையத்தில் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கண்டி மாவட்டத்தில் இதுவரை 52 பேர் உயிரிழந்துள்ளதுடன், 105 பேர் காணாமல் போயுள்ளனர்

பதுளை மாவட்டத்தில் 52 பேர் உயிரிழந்துள்ளதுடன், 42 பேர் காணாமல்போயுள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் 18 பேரும், கேகாலை மாவட்டத்தில் 9 பேரும் பலியாகியுள்ளனர். அந்த மாவட்டங்களில் முறையே 6 மற்றும் 24 பேர் காணாமல்போயுள்ளனர்.

இந்த அனர்த்தங்களால் நாடு முழுவதும் 234, 503 குடும்பங்களைச் சேர்ந்த 833, 985 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், 34,198 குடும்பங்களைச் சேர்ந்த 122,822 பேர் 919 பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (அ)

## இலங்கையின்...

என்றும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதற்கான வொஷிங்டனின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியது என்றும் அவர் கூறினார்.

இந்த நிதி அவசர நிவாரண நடவடிக்கைகளுக்குச் செல்லும் என கூறிய ஜூலி சங் தொடர்ச்சியான பாதக வானிலை நிலைமைகளுக்கு மத்தியில் மீண்டும் நாட்டை கட்டியெழுப்புவதில் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால கூட்டாண்மையை பிரதிபலிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (அ)

## முல்லைத்தீவு...

புதுக்குடியிருப்பு நகரில் வெள்ளம் தேங்கியுள்ளது. புதுக்குடியிருப்பு சிறீ சுப்பிரமணிய வித்தியாசாலையின் அருகாக உள்ள வீதியின் பாலம் உடைந்து காணப்படுகிறது. அந்தப் பகுதி முற்றாக நீரால் நிறைந்து காணப்படுகிறது.

ஆனந்தபுரம், மந்துவில் உட்பட்ட பகுதிகள் வெள்ளக்காடாக காட்சி தருகின்றன.

வட்டுவாகல் கரையிலிருந்து மறு கரை வரை நீர் மட்டம் வீதியின் மேலாக ஒரே மட்டமாக வெள்ளமாக காட்சி தருகிறது.

புதுக்குடியிருப்பிலிருந்து கேப்பாபுலவு ஊடாக பயணிக்கும் பாதை, கள்ளியடிப் பகுதியில் பல கிலோ மீற்றருக்கு வெள்ளக்காடாக காணப்படுவதால் அந்தப் பாதைப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது.

மாங்குளத்தின் ஊடாக ஒட்டுசுட்டான் ஒட்டுசுட்டான் ஊடாக புதுக்குடியிருப்பு பாதைகளும் போக்குவரத்து செய்ய முடியாத அளவிற்கு நீர் பாய்வதால் துண்டிக்கப்பட்டுள்ளன.

சாதாரண மழைக்கே பாதிக்கப்படும் புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் மார்க்கத்தில் உள்ள மன்னா கண்டல் மற்றும் பேராற்று பகுதி மக்களின் நிலை என்ன? என்பதை அறிய முடியவில்லை.

அதேவேளை முள்ளியவளை ஊடாக மாங்குளம் தண்ணீரூற்று ஊடாக நெடுங்கேணிபகுதிக்கான போக்குவரத்துப் பாதைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

அம்பலவன்பொக்கணை, மாத்தளன் பகுதிகளில் உள்ள மக்கள் பெருங்கடலுக்கும் சிறுகடலுக்கும் இடையில் சிக்கிய நிலையில் இரணைப்பாலையைச் சேர்ந்த மக்களால் படகுகள் மூலம் மீட்கப்பட்டு வருகின்றனர்.

பெருங்கடல் (இந்துசமுத்திரம்) நீர் அளவு கூடியிருப்பதால் எதிர்பார்க்கும் அளவிற்கு தரையில் சேரும் நீர் கடலில் கலப்பதில் தாமதம் காணப்படுகிறது.

இதனால் சிறுகடலில் சேரும் நீர் அளவு அதிகரித்து வருவதால் அம்பலவன்பொக்கணை, மாத்தளன் அதே போல ஆனந்தபுரம், மந்துவில், இரணைப்பாலையின் ஒரு பகுதி என்பனவற்றில் உள்ள மக்கள் பெரும் அவலப்படுகின்றனர்.

தொலைத்தொடர்புகள் செயற்படாமையினால் அரச கட்டமைப்பு செயற்படவில்லை. மக்களே மக்களைக் காப்பாற்ற வேண்டிய இக்கட்டான நிலை காணப்படுகிறது.

வெள்ளத்துள் சிக்கியிருக்கும் மக்களை எங்கே அழைத்துச் செல்வது என்ற நிலை காணப்படுகிறது. இதனாலேயே பெருமளவான மக்கள் அந்தப் பகுதிகளிலிருந்து வெளியேற முடியாத இக்கட்டுக்குள் சிக்குண்டிருக்கின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

## வெள்ளத்தில்...

மன்னார் மாவட்டத்தின் பல இடங்களில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே.திலீபன் தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைவாக ஏ-32 வீதி மன்னார் தொடக்கம் யாழ்ப்பாணம் வரை செல்லும் வீதி முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதன் காரணமாக , குறித்த வீதியூடாக பெரிய மற்றும் சிறிய வாகனங்களில் பயணம் செய்வதை முற்றாக தவிர்க்குமாறு பயணிகள் மற்றும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆகையால் பாதுகாப்பை கருத்தில் கொண்டு தேவையற்ற பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## மன்னாரில்...

செல்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டு இருப்பதாக திரும்பிச் சென்றுள்ளது.

அனர்த்த முகமைத்துவப் பிரிவின் எச்சரிக்கையை மீறி செல்வோர் இதனை கவனத்தில் கொள்ளவும்.

இது குறித்து அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டபோது இன்று ஞாயிற்றுக்கிழமை காலை மீட்புப் பணிக்காக உலங்கு வானூர்தி வருவதாக தெரிவித்தார். (அ)

## வடக்கின்...

ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று சனிக்கிழமை கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு அவசர களப்பயணத்தை மேற்கொண்டார்.

மாவட்ட செயலர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுடன் களத்தில் நின்றவாறு நிலைமைகளை ஆராய்ந்த ஆளுநர், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்துமாறு பணிப்புரை விடுத்தார்.

முதலாவதாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்குப் பயணம் செய்த ஆளுநர், மாவட்ட செயலர் சு.முரளிதரன் அவர்களுடன் கலந்துரையாடினார். நேற்று முன்தினம் இரவு மற்றும் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட மீட்புப் பணிகள் குறித்தும் ஆளுநர் கேட்டறிந்தார்.

பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாமுக்குச் சென்ற ஆளுநர், அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள பரந்தன், குமரபுரம், உமையாள்புரம் பகுதி மக்களைச் சந்தித்தார். அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்துக் கேட்டறிந்ததுடன், மக்களின் தேவைகள் குறித்தும் கலந்துரையாடினார்.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் கடற்படை மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் மீட்பு நடவடிக்கைகளை ஆளுநர் பார்வையிட்டார். வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டும் வெளியேற மறுத்த மக்களை, நிலைமையின் விபரீதம் கருதி உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு ஆளுநர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

முல்லைத்தீவு - பரந்தன் பிரதான வீதியில், கண்டாவளை பிரதேச செயலகத்துக்கு அண்மையிலுள்ள பாலம் வெள்ளத்தால் உடையத் தொடங்கியுள்ளமையையும், அதனால் அப்பகுதிக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதையும் ஆளுநர் பார்வையிட்டார்.

இரணைமடு குளத்துக்கு நேரடியாகச் சென்ற ஆளுநர், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் பொறியியலாளர் த.ராஜகோபுவுடன் நிலைமைகளை ஆராய்ந்தார்.

குளத்தின் வான் கதவுகள் மற்றும் கலிங்கு பகுதியூடாக வெளியேறும் நீர் பரந்து செல்லும் வழியில், முதலாவது படிக்கட்டு பிரதேசத்திலுள்ள அணையானது அரிப்புக்குள்ளாகியுள்ளமையை ஆளுநர் பார்வையிட்டார். பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதியிலிருந்து மக்கள் ஏற்கனவே வெளியேற்றப்பட்டுள் ளனர். மேலும் அணை அரிக்காமல் இருப்பதற்குத் தேவையான தடுப்பு நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்குமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி பிரதேச மருத்துவமனைக்குச் சென்ற ஆளுநர், அங்கு ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளைப் பார்வையிட்டார். மருத்துவமனை வெள்ளத்தால் சூழப்பட்டதற்குக் காரணமான வாய்க்கால்களையும் பார்வையிட்ட அவர், இதற்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தும் வகையில் விரைவில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதாக உறுதியளித்தார்.

இறுதியாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்குச் சென்ற ஆளுநர், மாவட்ட செயலர் அ. உமாமகேஸ்வரனுடன் கலந்துரையாடினார்.

மாவட்டத்தில் மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளமை, நாயாற்றுப் பாலம் சேதமடைந்துள்ளமை மற்றும் பல வீதிகள் துண்டிக்கப்பட்டுள்ளமை குறித்து மாவட்டச் செயலர் விளக்கமளித்தார்.

தன்னார்வலர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வது குறித்துக் கருத்துத் தெரிவித்த ஆளுநர், மாவட்ட செயலகங்கள் ஊடாக முறையான கோரிக்கைகள் முன்வைக்கப்படும்போது, சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஒருங்கிணைந்து அந்த உதவிகளைப் பெற்றுத்தர முடியும் எனக் குறிப்பிட்டார். (அ)

## தொலைத்தொடர்பு...

இதன் விளைவாக பல சமூகங்கள் நிலையான தொலைத்தொடர்பு மற்றும் இணைய சேவைகளை இழந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய தகவல் தொடர்பு இணைப்புகளை மீட்டெடுக்க, பழுதுபார்க்கும் குழுக்களும் தொலைத்தொடர்பு சேவையாளர்களும் சவாலான சூழ்நிலையில் பணியாற்றி வருவதாகவும், சிரமங்கள் மற்றும் நீர் மட்டங்கள் அதிகரிப்பதால் சில இடங்களில் மறுசீரமைப்பு முயற்சிகள் மெதுவாகி வருவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசரகால குழுக்கள் முன்னுரிமை அடிப்படையில் பணியாற்றி வருவதாகவும்,நிலைமைகள் சீராகும் பட்சத்தில் முழுமையான தொலைத்தொடர்பு இணைப்பு விரைவில் மீட்டமைக்கப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஜப்பான் எப்போதுமே இலங்கை மக்களுடன்!

## ஜப்பான் தூதுவர் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 30

இலங்கை முழுவதும் பேரழிவுகளை ஏற்படுத்திய "டிட்வா" புயலால் பாதிக்கப்பட்டு தங்கள் அன்பு உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கிறேன். பாதிக்கப்பட்ட அனைவருடனும் என் மனம் ஒற்றுமையில் நிற்கிறது என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசொமதா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த கடினமான நேரத்தில் துயரங்களை எதிர்கொள்ளும் அனைவரின் துயரத்தையும் என் இதயம் உணர்கிறது. தேவைப்படும் மக்களை பாதுகாக்கவும் அவர்களுக்கு உதவவும் பகல் இரவு பாராமல் பாடுபடும் அவசர மீட்புப்படையினர், அதிகாரிகள் மற்றும் தன்னார்வலர்களின் துணிச்சலும் அர்ப்பணிப்பும் மிக ஆழமாக பாராட்டப்படுகின்றன.

ஜப்பான் எப்போதும் இலங்கை மக்களுடன் இருந்துள்ளது, மேலும் இனியும் உங்கள் பக்கம் நிற்கும். பாதிக்கப்பட்ட அனைவரும் வலிமை, நம்பிக்கை பெற்று விரைவில் பாதுகாப்பான மற்றும் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பிடுவீர்கள்-என்றார். (அ)

# ஆபத்தான பயணங்களை மக்கள் தவிர்க்கவேண்டும்

## இராணுவத் தளபதி கோரிக்கை



கொழும்பு, நவ. 30

நாட்டின் பல பாகங்களில் நிலவும் அதிதீவிர காலநிலை காரணமாக அத்தியாவசியமற்ற மற்றும் ஆபத்தான பயணங்களை மக்கள் தவிர்த்துக்கொள்ளுமாறு இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிக்கோ பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே இராணுவத் தளபதி இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மோசமான காலநிலை காரணமாகப் பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்வதைத் தவிருங்கள். உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடியது என்பதை உணர்ந்து செயற்படுங்கள்.

நீங்கள் பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்வதால் உங்கள் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்திக் கொள்வதுடன், அந்த உயிர்களைக் காப்பாற்ற வரும் இராணுவம், கடற்படை, விமானப்படைப் பணியாளர்களின் உயிர்களுக்கும் ஆபத்தை விளைவிக்கிறீர்கள்.

எனவே, அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்கவும்.

அரசால் வழங்கப்படும் ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டால், தயவுசெய்து அந்த இடத்திலிருந்து வெளியேறுங்கள். அவ்வாறு குறிப்பிடப்படுவது ஒரு அனர்த்தம் ஏற்படலாம் என்பதனாலேயே-என்றார். (அ)

# இரணைமடுக்குள வால்கட்டு பகுதி வெட்டி மேலதிக நீர் வெளியேற்றம்!

கிளிநொச்சி, நவ. 30

கிளிநொச்சி - இரணைமடுக்குளத்தின் வால்கட்டுப் பகுதி வெட்டி மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி - இரணைமடுக்குளத்தின் அனைத்து கதவுகளும் நேற்று முன் தினம் காலை முதல் திறந்த நிலையில் இருந்தபோதிலும், நீரேந்து பிரதேசங்களிலிருந்து நீர்வரத்து அதிகரித்து முழு கொள்ளளவை தாண்டியதால் குளத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய வால்கட்டுப் பகுதி வெட்டி மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, குளத்தின் கீழ் பகுதிகளில் வாழும் மக்கள், குறிப்பாக இராமநாதபுரம் வட்டக்கச்சி, மாயவனூர் மற்றும் ஏனைய வெள்ள அபாய பிரதேசங்கள் இருப்பவர்கள் அவதானமாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளது. (அ)

# சர்வதேச நிறுவனங்களிடம் உடனடி உதவி கோருங்கள்!

## அரசிடம் சந்திரிக்கா கோரிக்கை

கொழும்பு, நவ. 30

நாட்டின் அனர்த்த நிலைமைகளை கருத்திற்கொண்டு சர்வதேச நிறுவனங்களிடமிருந்து உதவியை நாடுமாறும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

காணொளிச் செய்தி மூலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்தத் தன்மையிலான அனர்த்த நிலைமையை இலங்கை தனியாக கையாள முடியாது. எனவே, சர்வதேச உதவிகளை நாட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# நீர்நிலைகளில் விளையாடாதீர்!

கொழும்பு, நவ. 30

[illegible] நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் அவ[illegible]திகளில் விளையாடுவதை தவிர்க்[illegible] எச்சரிக்கை விடு[illegible]ள்ளது.

[illegible] வெள்ளநீரில் விளையாடுபவர்கள் [illegible]ணொளிகள் சமூக வலைத்தளங்களில் [illegible]. இது உயிராபத்தான செயல் [illegible] இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட [illegible] அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# யாழில் இருந்து பயணித்த 69 பேரின் உயிர்களை காப்பாற்றியோருக்கு நன்றி கூறிய அரச அதிபர்!

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பஸ் கலாஓயா பகுதியில் வெள்ளத்தில் சிக்கியவேளை அந்த பஸ்ஸில் இருந்த 69பேரும் பாதுகாப்பாக மீட்கப்பட்ட நிலையில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நன்றி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயணம் செய்த பஸ் கலாஓயா பகுதியில் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டது. அந்த பஸ்ஸில் பயணம் செய்த 69 பேர் அநுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்டங்களுக்கு இடையிலான கலாஓயா பகுதியில் பாதுகாப்பாகக் கூரையில் தங்க வைக்கப்பட்டிருந் தனர். இவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு நொச்சிகாமம் வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இடர்மிகுந்த சூழலில் புத்தளம் மற்றும் அனுராதபுரம் மாவட்ட செயலாளர்கள், விமானப்படை, கடற்படை இராணுவம், பொலிஸார், அனர்த்த முகா மைத்துவ பிரிவினர் மற்றும் மீட்பு பணியாளர்கள், வைத்தியசாலை பணியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு பயணிகளை பாதுகாப்பாக மீட்டமைக்கு யாழ்ப்பாண மாவட்ட மக்கள் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

சகல மாவட்ட அரச அதிபர்களுடனான ஜனாதிபதியின் சூம் கலந்து ரையாடலில் யாழ்.மாவட்டத்தின் வெள்ள நிலவரம் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மேற்படி விடயம் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதுடன் ஜனாதிபதியின் செயலாளர், அநுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்ட செயலாளர் ஆகியோரு டன் தொலைபேசியில் தொட ர்பு கொண்டு மீட்பு நடவடிக்கையை துரிதப்படுத்து மாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

பல்வேறு நெருக்கடிகள், இடர் பாடுகளுக்கு மத்தியிலும் மீட்புப் பணியில் ஈடுபட்ட அனைத்து தரப்பினருக்கும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் என்ற வகையில் நன்றி கலந்த பாராட்டுகளை தெரி வித்துக் கொள்கிறேன் - என்றார். (அ)

# இலங்கைக்கு 50,000 அமெரிக்க டொலர் நிவாரண உதவி வழங்கும் மாலைதீவு!

கொழும்பு, நவ. 30

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு மாலைதீவு நிவாரணங்களை அறிவித்துள்ளது.

இதன்படி, 50,000 அமெரிக்க டொலர் நிதி உதவி மற்றும் 25,000 டுனா மீன் ரின்கள் நன்கொடை மூலம் நிவாரண உதவி வழங்க மாலைதீவு அரசாங்கம் முன் வந்துள்ளது.

டித்வா சூறாவளியால் இலங்கை பேரிடர்களை எதிர்கொண்டுள்ள நிலையில் மாலைதீவு மக்களின் சார்பாக மனிதாபிமான மற்றும் நிவாரண உதவிகளை இலங்கை மக்களுக்கு வழங்க மாலைதீவு அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கை நெருங்கிய அண்டை நாடு மற்றும் நட்பு இலங்கை மக்களுடனான ஒற்றுமையின் நிரூபணம் என மாலத்தீவு வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நன்கொடை, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு பங்களிக்கும் என மாலைதீவு நம்புகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழில் அனர்த்த பாதிப்புக்களைச் சந்தித்த 130 குடும்பங்கள் பாதுகாப்பு நிலையங்களில்!

## அரசாங்க அதிபர் பிரதீபன் தகவல்



யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்.மாவட்டத்தில் 130 குடும்பங்களைச் சேர்ந்த 390 அங்கத்தவர்கள் 12 பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கான சமைத்த உணவு பிரதேச செயலாளர்களினால் வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

தென்மராட்சி, நெடுந்தீவு, வேலணை, சண்டிலிப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவுகளில் 130 குடும்பங்களைச் சேர்ந்த 390 அங்கத்தவர்கள் 12 பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும்,

1580 குடும்பங்களை சேர்ந்த 4993 அங்கத்தவர்கள் நண்பர்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் புங்குடுதீவிலிருந்து குறிகாட்டுவான் வரையான தரைப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன் குறிக்கட்டுவானிலிருந்தான சகல படகு சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நெடுந்தீவு, நயினாதீவு, எழுவை தீவு, அனலை தீவிற்கான படகுசேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு தங்களது வீடுகளிலிருந்து வெளியேறும் மக்கள் தங்குவதற்கான பாதுகாப்பு நிலையங்கள் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக அமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கிராம சேவையாளரின், பிரதேச செயலாளரின் உதவியினை பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org